பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விழுயல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 18 திங்கட்கிழமை 03.08.2020 கதிர் 267

### இது ரகசியம் அல்ல!

பொதுத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் உண்மைக்குப் புறம்பான – குளறுபடியான – மக்களைத் திசை திருப்புகின்ற – செய்திகள், தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக – குறிப்பாக சமூக ஊடகங்கள் மூலமாக – வெளியேகசியவிடப்பட்டு பரபரப்பு பக்கம்02 »

## வீட்டுச் சின்னத்துக்கு புள்ளடி இடாவிட்டால் கோட்டாவுக்கு 2/3 பெரும்பான்மை கிட்டும்!

### விபரீதத்தை விளக்குகிறார் சரவணபவன்



யாழ்ப்பாணம், ஓக. 03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச்சின்னத்துக்கு போடப்படாத ஒவ்வொரு புள்ளடியும், கோட்டாபயஅரசுமூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையே ஏற்படுத்தும். இந்த விபரீதத்தை அறியாது, வரப்போகும் பெரும் ஆபத்தை உணராது எமது மக்கள் இருப்பது துன்பகரமானது. மக்கள் வாக்களிக்காமல் ஒதுங்குவதும், கூட்டமைப்புக்கு வாக்களிக்கத் தவறுவதும், ராஜபக்ஷக்களுக்கு கட்டுக்கடங்காத அதிகாரத்தை அள்ளி வழங்கி தமிழர்களை மீண்டும் இருண்ட யுகத்தில், அதலபாதாளத்தில் தள்ளும் நடவடிக்கையாக மாறி விடக்கூடும். பக்கம் 10 »

## யாழ்.,வன்னி, மட்டக்களப்பில் கூட்டமைப்புக்குப் பெரு வெற்றி

### அடித்துக் கூறுகின்றார் பஸில்

கொழும்பு, ஓக. 03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணம், வன்னி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மூன்று தேர்தல் மாவட்டங்களில் அமோக வெற்றிபெறும். ஏனைய 19 தேர்தல் மாவட்டங்களில் அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் மாத்திரமே அதிக போட்டித்தன்மை காணப்படுகின்றது. அந்தவகையில் 17 மாவட்டங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வெற்றியடைவது உறுதியாகியுள்ளது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பக்கம் 02 »

# காமுகனான பிரேமானந்தாவின் சீடர்களை விடுவிக்க மோடியிடம் கோரியவரே விக்கி!

## நாங்களோ அவருடன் தீர்வு பற்றியே பேசினோம் கிட்டு பூங்கா கூட்டத்தில் சுமந்திரன் சாட்டையடி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 03

விக்னேஸ்வரனின் தோற்றத்தை வைத்து மக்கள் வாக்களிக்கவேண்டாம். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணம் வருகை தந்தபோது, நாங்கள் அரசியல் தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், காணி விடுவிப்பு பற்றிக் கலந்துரையாடினோம். ஆனால் அவரோ மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசாது காமுகன் பிரேமானந்தாவின் சீடர்களை விடுவிக்குமாறு இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் வேட்பாளருமான எம்.ஏ. சுமந்திரன்.

பக்கம் 03 »



## தமிழர்கள் ஒற்றுமையாக திரண்டு கூட்டமைப்பையே ஆதரியுங்கள்!

### தமிழ் மக்களிடம் சம்பந்தன் வேண்டுகோள்



திருமலை, ஓக. 03

எங்களை நாங்களே ஆளும் வகையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டியது அவசியம். இதனை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தெளிவாக – ஆணித்தரமாக எடுத்துச் சொல்வதற்கு நாம் ஓரணியில் ஒன்றுபடவேண்டும். ஆகவே பக்கம் 02 »

### மாதிரி வாக்குச்சீட்டுகளுடன்

## வேட்பாளர் உட்பட நான்கு பேர் கைது

முல்லைத்தீவு, ஓக. 03

முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் மாதிரி வாக்குச்சீட்டுக்களை கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் ஒருவர் உள்ளிட்ட நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் மாதிரி வாக்குச்சீட்டுடன் கட்சி ஆதரவாளர்கள் சிலர் நடமாடுவதாகத் பக்கம் 02 »

## விடுதலையைப் பெற்றிட தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வீட்டுக்கே வாக்களியுங்கள்

### கிட்டு பூங்கா பரப்புரைக் கூட்டத்தில் மாவை அறைகூவல்




யாழ்ப்பாணம், ஓக. 3

தமிழ்த் தேசிய விடுதலையைப் பெற்றிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கி இலங்கை அரசுடனும், இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் செயலாற்றத் தொடர்ந்தும் சந்தர்ப்பத்தைக் கொடுங்கள். எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் பக்கம் 02 »

## இரணைமடுத் தண்ணீர்ப் பிரச்சினைக்காக என்னைத் தோற்கடித்தால் அதனை ஏற்பேன்

### உண்மைகளை அம்பலப்படுத்துகிறார் சிறீ

இரணைமடு குடிதண்ணீர் தான் பிரச்சினை என்றால் என்னை நிராகரியுங்கள். வரலாற்றுத் தோல்வியை எதிர்கொள்ள நான் தயார். – என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பக்கம் 10 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தப்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அந்த வகையில் நேற்றுப் பிரசாரம் ஓயும்சமயத்தில்ஒருவிடயம்அரங்கேறியது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதகரத்தின் உத்தியோகபூர்வ கடிதத்தில் தலைப்பை பிரதிபண்ணி அந்தத் தலைப்பில் ஒரு செய்தி பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டது.

வழமையாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகம் வெளியிடும் செய்திக் குறிப்புப் போன்ற அச்சுருவம், அச்சிடும்மை நிறம் எல்லாம் பயன்படுத்தப்பட்டு, அது வெளியாகியிருந்துள்ளது. அதில் –

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா எடுக்கும் முயற்சிகளை எம்.ஏ.சுமந்திரன் குழப்புகின்றார் என்றும் –

சுமந்திரன் இந்துக்களை அதிகம் அமெரிக்கத் திருச்சபைக்கு மதம் மாற்றுகின்றார் என்றும் –

ஆகவே அவருக்கு வாக்களித்து அவரைத் தெரிவு செய்தால், தீர்வு விடயத்தில் இனி இந்தியா வெறும் பார்வையாளராக ஒதுங்கிவிடும் என்றும் –

சாரப்பட செய்திகள், விவரங்கள் இருந்தன.

ஊடகவியலாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதுவர் பாலச்சந்திரனோடு தொடர்பு கொண்டு இது குறித்துக் கேட்டார்.

*"உள்நாட்டுத் தேர்தல்களில் நாங்கள் தலையிடுவதில்லை. அந்தச் செய்திக் குறிப்புக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை"* – என்று பதிலளித்தார் துணைத் தூதுவர்.

இந்த முறைத் தேர்தலுக்கு இடையில் இது போன்ற எத்தனை 'திருகுதாளங்கள்' வெளிவரவுள்ளனவோ தெரியவில்லை.

கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது – 2013 செப்பெரம்பரில் – தேர்தல் வாக்களிப்பன்று யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகையின் பெயரில் – பாணியில் – ஒரு போலி நாளிதழே வெளிவந்தமை மறக்கக் கூடியதன்று.

இம்முறையும் அப்படிக் குசும்புத்தனச் செயல்களை எதிர்பார்க்கலாம்!

–மின்னல்–

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 5ஆம் திகதி தமிழர்கள் அனைவரும் ஒருமித்து ஒற்றுமையாகக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்தார்.

பெருந்திரளான மக்களின் பங்களிப்புடன் திருகோணமலை முத்துக்குமார சுவாமி கோயில் முன்றலில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: –

தமிழர்களை எவரும் அச்சுறுத்த முடியாது. மிரட்ட முடியாது. சர்வதேச சமூகமும் தமிழர்களின் பின்னால்தான் நிற்கின்றது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் எங்கள் பின்னால்தான் நிற்கின்றார்.

புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியான, சமத்துவமான, கௌரவத்துடன் கூடிய தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரில் வலியுறுத்தியுள்ளார்.

ஒற்றையாட்சி முறையானது பல இனங்கள் இணைந்து வாழ்கின்ற நாட்டுக்கு உகந்த முறை அல்ல. இந்த முறை மாற்றி அமைக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தந்த பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் தமது இறைமையின் அடிப்படையில் தம்மை தாமே ஆளுகின்ற வண்ணம் சட்ட திட்டங்கள் அமைய வேண்டும்.

தமிழ் மக்கள் அநீதியாக ஒன்றும் கேட்கவில்லை. ஒருமித்த நாட்டுக்குள் ஜனநாயகத்தின் அடிப்படையில் எமது தீர்வையே வலியுறுத்தி வருகின்றோம். நாங்கள் நாட்டைப் பிரிக்கவேண்டும் என்று கேட்கவில்லை.

அன்றும் பெரும்பான்மை இனத்தோடு ஒற்றுமையாக வாழ வேண்டும் எனறே எமது மக்கள் விரும்பினார்கள். ஆனால், எல்லா விடயங்களிலும் நாம் திட்டமிட்டு பலவீனப்படுத்தப்பட்டோம்.

பொலிஸ், காணி, அபிவிருத்தி, கல்வி, தொழில் வாய்ப்பு போன்ற துறைகளில் அநீதி இழைக்கப்பட்டது. எனவேதான் எமது அதிகாரத்தை எமது இறைமையின் அடிப்படையில் வழங்குமாறு வலியுறுத்தி வருகின்றோம்.

எம்மில் எந்த ஒரு தளர்வும் இல்லை என்பதை இலங்கை அரசுக்கும் சர்தேச சமூகத்துக்கும் உணர்த்த வேண்டும். எனவே, எதிர்வரும் 5ஆம் திகதி தமிழர்கள் அனைவரும் ஒருமித்து ஒற்றுமையாக ஒரே அணியில் வாக்களிக்கவேண்டும்.

இவ்வாறு நாம் வாக்களிப்போமானால் திருகோணமலையில் இரண்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை நாம் பெற முடியும். இரண்டு தடவைகள் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. எனவே சிந்தித்து வாக்களியுங்கள் – என்றார்.

## விடுதலையைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சின்னத்துக்கு அனைவரும் ஒன்றுபட்டு வாக்களித்து தமிழர் பலத்தை நிரூபியுங்கள். பெருமளவு விருப்பு வாக்குகளினால் அதிக பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுங்கள்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழ்.நல்லூர், கிட்டு பூங்காவில் நேற்றிரவு நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

70 ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத தமிழினப் பிரச்சினைக்கான தீர்வு பற்றியோ, அப்பிரச்சினை தீர்க்கப்படாததால் நடைபெற்ற போராட்டங்களினால், போரினால், இனக் கலவரங்களால் அழிக்கப்பட்ட இலட்சக்கணக்கான தமிழர்களைப் பற்றியோ உச்சரிக்காத அரசுக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும்.

நாடாளுமன்றத்திலும் பதவி ஏற்பின் போதும் பௌத்த சிங்கள பெரும்பான்மைத்துவ மக்கள் தன்னை நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்துள்ளனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

அத்துடன், புதிய அரசமைப்பொன்றை உருவாக்கப் போகின்றார் எனவும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைப் பலப்படுத்தப்போகின்றார் எனவும், அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் அறிவித்துள்ளார்.

அரச துறையில் அமைச்சுச் செயலாளர்கள், அரச திணைக்களங்கள், பொதுத் துறைகளில் முன்னாள் இராணுவத் தளபதிகளை, இராணுவத்தினரை நிர்வாகப் பொறுப்புக்களில் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வற்ற, அதைப் பற்றியே உச்சரிக்காத ஓர் அரசமைப்பின் முன் தமிழ்த் தேச மக்களின் அரசியல் எதிர்காலம் பெரும் சவாலாக அமையப் போகின்றது.

நாட்டில் ஒரு சர்வாதிகார ஜனாதிபதி முறைமை, பௌத்த சிங்கள, பெரும்பான்மைத்துவ ஆட்சி முறைமை, அத்துடன் இராணுவ ஆதிக்க அரச நிர்வாகத்துறை கொண்ட அரசமைப்பைத் தடுத்து நிறுத்தி நாட்டின் ஜனநாயக சக்திகள் தமிழ் மக்கள் உட்பட அணிதிரள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதன் அவசியத்தை எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம்.

2014ஆம் ஆண்டு ஜனநாயக சக்திகள் அணிதிரண்டு ஆட்சி மாற்றத்தையும் அரசமைப்பு மாற்றத்தையும் ஏற்படுத்தத் திடசங்கற்பம் கொண்டதுபோல் ஒரே நிலைப்பாடு ஏற்பட்டால் மட்டுமே தமிழினத்தின் அரசியல் தீர்வுக்கும் சந்தர்ப்பம் உருவாகும். 2015இல் அது நடைபெற்றது.

போர் முடிவடைந்தது என்ற நிலையில் 2011ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையை அமெரிக்க இராஜாங்க அமைச்சு வொஷிங்டனுக்கு அழைத்தது. மூன்று நாட்கள் இலங்கையில் போரின் காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் பற்றி ஆராயப்பட்டது. இறுதியில் போர்க்குற்றங்கள் பற்றிய சர்வதேச விசாரணைக்கே முன்னுரிமை கொடுத்து ஐக்கிய நாடு மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு மார்ச்சில் 47 நாடுகள் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 24 வாக்குகளைப் பெற்று அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசு, ரஷ்யா, சீன நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. ஆனால், இலங்கையில் 2015ஆட்சி மாற்றத்தின் பின்னர் அதே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 47 நாடுகளும் ஏகமனதாக இலங்கை இணை அனுசரணையுடன் 30/1, 34/1, 40/1 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவை தமிழ் மக்களுக்கு ஆதரவான தீர்மானங்களாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தீர்மானங்களில் முக்கியமான வகிபாகங்களைக் கொண்டிருந்தது. அந்தத் தீர்மானங்களின் ஆதரவை நாம் பற்றி நிற்க வேண்டும். அதனை நாம் தொடர வேண்டும். நாடாளுமன்றத்திலும் சர்வதேச அரங்கிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பணி தொடர வேண்டும்.

2014ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் தமிழரசுக் கட்சிக்கு எதிராக சிங்களத் தீவிரவாதிகளால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு 2017இல் வழங்கப்பட்டது. அந்தத் தீர்மானமாவது கனேடிய சமஷ்டி நீதிமன்றத்தில் கியூபெக் மக்கள் வழக்கில் வழங்கப்பட்ட தீர்மானத்தை ஒத்திருந்தது. அந்தவகையில், 'தமிழரசுக் கட்சி கோரும் சமஷ்டித் தீர்வு நாட்டைப் பிளவுபடுத்தாது. உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கொண்டது' எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழினத்தின் தீர்வுத் திட்டங்களுக்கும் பலமானது.

கூட்டமைப்பின் சமஷ்டிக் கோரிக்கை நாட்டைப் பிளவுபடுத்தப் போகின்றது என மஹிந்த ராஜபக்ஷ கூறுவராயின் இந்த நாட்டு அரசமைப்பையும் அதன்மூலம் உயர்நீதிமன்றத் தீர்ப்பையும் ஏற்க மறுக்கின்றாரா என்பதே கேள்வி.

இலங்கை நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் புதிய அரசமைப்பின் மூலம் ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு எனும் உருவாக்கம் முக்கியமானது. 2018ஆம் ஆண்டு இனப்பிரச்சனைத் தீர்வு உள்ளடங்கிய அரசியல் திட்டம் முன்னேற்றகரமானது. இதன் தொடர்பாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட இடைக்கால அறிக்கை முழுமையடைய சந்தர்ப்பங்கள் இருந்தன.

ஆனால், இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்ட 'ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு என்பது நாட்டைப் பிளவுபடுத்தி விடும்' என்று கூறி ராஜபக்சவினரின் தூண்டுதலினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

இதனால், 2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டமும் தடைப்பட்டது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பத்து நிபுணர் குழுவின் மேம்பட்ட அறிக்கையும் தடைப்பட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள நிலங்கள் கணிசமான அளவு மீட்கப்பட்டாலும் மிகுதி விடுவிப்பு தடைப்பட்டு விட்டது. விடுவிக்கப்பட்ட நிலங்களில் மக்கள் குடியேறி வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. திருகோணமலையில் சம்பூர் முழுமையாக விடுவிக்கப்பட்டு மக்கள் குடியேறியுள்ளனர். கேப்பாப்பிலவில் ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டது. வலிகாமம் வடக்கில் 80 வீத நிலங்கள் விடுவிக்கப்பட்டன. வடக்கு, கிழக்கில் இவ்வாறு மேலும் நிலங்கள் விடுவிக்கப்பட்டன. 2017, 2018களில் 50ஆயிரம் செங்கல், சீமெந்து வீடுகள் ஒவ்வொன்றும் 10 இலட்சம் பெறுமதியில் நடைமுறைக்கு வந்தன. 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை நாடாளுமன்றம் நீடித்திருந்தால் நில விடுவிப்பு உட்பட்ட பல விடயங்களில் மேலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கும்.

காங்கேசன்துறையில் துறைமுகம், சர்வதேச விமான நிலையம், மயிலிட்டியிலும் பருத்தித்துறையிலும் மின்பிடித் துறைமுகங்கள், சீமெந்துத் தொழிற்சாலை பிரதேசத்தில் தொழிற்பேட்டைகள், தொழில்நுட்பதொழில்துறைகள் அமைக்க அமைச்சரவை தீர்மானத்துடன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவைகள் நிறைவடையும்போது வேலை வாய்ப்புக்கள், பொருளாதார வளம் பெருக வாய்ப்புக்கள் வந்திருக்கும். நாடாளுமன்றம் முழுக்காலமும் நடைபெற்றிருந்தால் பயன் கிடைத்திருக்கும். வடக்கு, கிழக்குக்கெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 8 கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக பனை நிதியம் இரண்டு ஆண்டுத் திட்டங்கள் ஏற்கப்பட்டு வரவு – செலவுத் திட்டத்திலும் 2018இல் 200 மில்லியன் ரூபா ஆரம்ப நிதி அறிவிக்கப்பட்டது.

அதன் மொத்த நிதித்திட்டம் ஐயாயிரம் பில்லியன்களாகும். ஒவ்வொரு தொகுதியிலும் ஏனைய பல துறைகளின் திட்டங்களுடன் 300 முதல் 400 மில்லியன் வரை கம்பரெலியா நிதி ஒதுக்கீடும் வேலைகளும் இடம்பெற்றன.

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் அரசு ஒன்றுடன் ஏற்படக்கூடிய ஜனநாயக சந்தர்ப்பம் – தமிழ்த் தேச மக்கள் இன விடுதலைக்குப் பேச்சு மூலம் தீர்வுகாண பேச்சு நடத்தும் நிலை ஏற்படுமானால் பேச்சு நடத்தவும் கூட்டமைப்பு தயார். அல்லது ஜனநாயக வழிகளில் மக்களை அணிதிரட்டி போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கவும் சர்வதேசத்துடன் புதிய அணுகல் முறைகளில் செயற்படவும் நாம் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய விடுதலையைப் பெற்றிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை வழங்கி இலங்கை அரசுடனும், இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் செயலாற்றத் தொடர்ந்தும் சந்தர்ப்பத்தைக் கொடுங்கள் எனத் தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

ஆகவே, எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்துக்கு அனைவரும் ஒன்றுபட்டு வாக்களித்து தமிழர் பலத்தை நிரூபியுங்கள். பெருமளவு விருப்பு வாக்குகளினால் அதிக பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுங்கள் – என்றார்.

## வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் அடிப்படையில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஒருவரும், அந்தக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர் ஒருவருமாக நால்வர் கைதுசெய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## யாழ்.,வன்னி,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

அரசின் தேவைகளுக்காக அரசமைப்பு அடிக்கடி மாற்றமடைந்துள்ளது. மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. எமது புதிய அரசில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தமிழ், முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து அரசியலில் பயணிக்கின்றது எனச் சர்வதேச மட்டத்தில் தெரிவிக்கப்படும் கருத்து முற்றிலும் தவறு.

பயங்கரவாதத்துக்கும் அடிப்படைவாதத்துக்கும் மாத்திரமே நாங்கள் எதிரானவர்கள். ஆகவே, தமிழ், முஸ்லிம் மக்கள் புதிய அரசில் கட்டாயம் இணைந்து கொள்ள வேண்டும்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 130 தொடக்கம் 140 வரையான ஆசனங்களை நிச்சயம் கைப்பற்றும். 150 ஆசனங்களை முழுமையாகக் கைப்பற்றுவதே எங்களின் இறுதிவரையான முயற்சியாகும்.

# தமிழ் மக்களின் ஒற்றுமை குறித்துப் பேச சம்பந்தனுக்கு யோக்கியதை கிடையாது

## நல்லூர்க் கூட்டத்தில் வேட்பாளர் சிறீகாந்தா காட்டம்

யாழ்ப்பாணம், ஒக.03

தமிழ் மக்களின் ஒற்றுமை பற்றி பேசுவதற்கு கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனுக்கு தார்மீகத் தகுதி – யோக்கியதை – எதுவும் கிடையாது. 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் குறுகிய பிரதேச வாதத்தை பிரயோகித்தே அவர் என்னைத் தோற்கடித்தார்.

– இவ்வாறு நல்லூரில் நடைபெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் வேட்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சரிந்து, சாய்ந்து கொண்டிருக்கும் தனது கட்சியின் அரசியல் ஆதரவுத் தளத்தை காப்பாற்றுவதற்காக தனது உடல் நிலையையும் கருத்திற் கொள்ளாமல் திருகோணமலையிலிருந்து யாழ்பாணத்திற்கு வந்து கடைசிக்கட்ட தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

இருபது ஆசங்களை கூட்டமைப்பு கைப்பற்ற வேண்டும் என்றும், கைப்பற்றும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பகல் கனவு காணும் ஒரு பிச்சைக்காரனைப் போல அவரின் பேச்சு அமைந்துள்ளது

இந்தத் தேர்தலில் கூட்டமைப்பினால் பத்து ஆசனங்களைக்கூட கைப்பற்ற முடியாது என்பதை அதன் பெருந்தலைவரான சம்பந்தருக்கு உரிய மரியாதையுடன் முன் கூட்டியே கூறி வைக்க விரும்புகின்றோம்.

தமிழ் இனம் ஒற்றுமையாக, ஓரணியில் நிற்க வேண்டும் என்றும் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்

ஒற்றுமை பற்றிப் பேச எந்தவொரு தார்மீகத் தகுதியும் அவருக்குக் கிடையாது என்பதை சொல்லியாக வேண்டும்

2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மார்கழி மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது

அந்தத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவராக நானும் களத்தில் இருந்தேன். சம்பந்தர்தான் முதன்மை வேட்பாளர்.

தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்க ஆரம்பித்த பொழுது தமிழ் மக்களின் ஆதரவு எனது பக்கம் திரும்பத் தொடங்கியது.

தமிழ்த் தேசியத்தை நேசித்த பல்லாயிரம் தமிழ் வாக்காளர்கள் சம்பந்தரின் நடவடிக்கைகளால் விரக்தி அடைந்திருந்தனர். அவர்களின் ஒரே தெரிவாக நான் மாறத்தொடங்கினேன். இதனைக் கண்டு சம்பந்தர் மிரண்டார். ஓர் அரசியல் சதித் திட்டம் தீட்டப்பட்டது.



சம்பந்தரின் நெருங்கிய சகாக்களும் தீவிர விசுவாசிகளும் யாழ்ப்பாண விரோதக் கோத்தை எனக்கெதிராகப் பிரயோகித்தனர். யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த எனக்கெதிராக தீந்தமிழ் திருகோணமலை மண்ணில் பிரதேச வாதம் என்கின்ற நாகாஸ் திரம் நயவஞ்சகமாகப் பிரயோகிக்கப்பட்டது. வெற்றி பெற்றிருக்கக் கூடிய நிலையில் நான் வீழ்த்தப் பட்டேன்

சம்பந்தருக்கு நாற்பதாயிரம் விருப்பு வாக்குகள். அவருடன் இணைந்த இரண்டாவது ஆசனத்தை குறிவைத்து போட்டியிட்ட துரைரத்தினசிங்கத்திற்கு இருபத்தியொராயிரம்

வாக்குகள். எனக்கு இருபத்தையாயிரம் வாக்குகள். எனக்கு அடுத்ததாக வந்த சம்பந்தர் தரப்பு வேட்பாளருக்கு ஒன்பதாயிரம் வாக்குகள். ஏனைய மூவருக்கும் ஒரு சில ஆயிரம் வாக்குகள்.

சம்பந்தரின் தேர்தல் வெற்றி குறுகிய பிரதேச வாதத்தினால் பெறப்பட்டது. தமிழ்த் தேசிய ஒற்றுமை என்ற இலட்சியம் முதுகில் குத்தப்பட்டது.

இப்பொழுது அதே சம்பந்தன் யாழ்ப்பாணம் வந்து தமிழினத்தின் ஒற்றுமை பற்றிப் பேசுகிறார். இவரின் அரசியலை தமிழ் மக்கள் முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இத்தனை நாளும் நான் பேசாமல் தவிர்த்து வந்த விவகாரத்தை இப்பொழுது நான் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. – என்று அவர் தெரிவித்தார்.

## காமுகனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் இறுதி நாள் பரப்புரைக் கூட்டம் நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்று இரவு நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலம் தெரிவிக்கையில்–

இந்தத் தேர்தல் களம் ஆரம்பமான காலத்திலிருந்தே சில பொய்ப் பிரசாரங்கள் திட்டமிட்டபடி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை நண்பன் சிறீதரன் இங்கு பேசும்போது கூட சொல்லியிருந்தார். இந்தப் பொய்ப் பிரசாரங்களை சில ஊடகங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றன. அந்தச் சில ஊடகங்கள் சிலரை விலைக்கு வாங்கி அவர்கள் மூலமாகவும் அந்தப் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுக்கிறார்கள்.

துரதிஷ்டவசமாக எங்கள் அணிக்குள்ளே இருந்த சிலரை விலைக்கு வாங்கி அப்படியான பொய்ப்பிரசாரங்கள் நடைபெறுகின்றன. இன்று இரவோடு இந்தத் தேர்தல் பிரசாரங்கள் முடிவடைந்த பிறகு நாளை அல்லது நாளை மறுதினம் என்னவிதமான பொய்ப் பிரசாரங்களை அவர்கள் அவிழ்த்து விடுவார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் மக்களை எச்சரிக்கவேண்டிய ஒரு தேவை இருக்கின்றது.

ஏனென்றால் இதில் முன்னின்று செயற்படுவது லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு தமிழ்த் தொலைக்காட்சி ஊடகம். இலண்டனை தளமாகக் கொண்டு இயங்கும் காரணத்தினாலே தேர்தல் ஆணைக் குழு கொடுத்திருக்கின்ற கட்டுப்பாடுகள் அவர்களைக் கட்டுப்படுத்தாது. நாளைக்கும் நாளை மறுதினமும் பல பொய்யான வதந்திகள், குற்றச்சாட்டுக்கள் பரப்பப்படும் என்று நான் நம்புகின்றேன். அது என்னவென்று தெரியாது. ஆனால் இந்த விசமத்தனமான பொய்ப் பிரசாரங்களுக்கு நீங்கள் செவி கொடுக்கக்கூடாது.

ஏற்கனவே இந்த எச்சரிக்கை உங்களுக்கு கொடுக்கப்படுவதற்கான காரணம் என்னவெனில் நாங்கள் அவற்றுக்குப் பதில் சொல்ல முடியாத இரண்டு நாட்கள் இருக்கின்றன. ஆனால் இந்த கடைசி இரண்டு நாட்களிலும் இப்படி பொய்ப் பிரசாரங்களைச் செய்வதற்கான வேலைகள் எல்லாம் நடைபெற்றிருப்பது எங்களுக்குத் தெரியும். அது அந்த ஒரு ஊடகம் மட்டுமல்ல. குறிப்பாக பல பிரசுரங்கள் கூட விநியோகிக்கப்படலாம். இன்றைக்கும் அப்படியான சில பிரசுரங்கள் கூட விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

இதைக் குறித்து அதிகம் விசனப்படவில்லை. ஏனென்றால் யார் நேர்மையாக மக்களுக்காக சேவை செய்திருக்கிறோம் என்று மக்களுக்குத் தெரியும். அதற்கான தீர்ப்பை நீங்கள் கொடுப்பீர்கள். ஆனால் எந்தத் துணிவில் இப்படியான பொய்ப் பிரசாரங்களை கூச்சமின்றி அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது தான் எனக்குப் புரியாமல் இருக்கிறது.

மக்களை முட்டாள்களாக்கும் செயற்பாடுகள் பல நடந்துகொண்டே இருக்கின்றன. இங்கு சிறீதரன் பேசும்போது சொன்னார், எங்கள் அணியில் இருக்கின்ற ஒருவரின் பத்திரிகை தன்னுடைய செய்தியையும் என்னுடைய செய்தியையும் நாளைக்கு பிரசுரிக்காது என்று சொல்லியிருந்தார். ஆம் அது பிரசுரிக்காதுதான். அவ்வாறு பிரசுரிப்பதாக இருந்தால் ஏதாவது சேறுவாரி அள்ளி வீசித்தான் பிரசுரிக்கும். ஆகவே அவர்களையும் மக்கள் இனங்காணவேண்டும்.

இன்னொரு விடயத்தை உங்களுக்கு நான் சொல்லி வைக்கவேண்டும். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதா இல்லையா என்று ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் நாங்கள் சிந்திப்பது உண்டு. அப்படியாக நாங்கள் சிந்திக்கின்றபொழுது எனக்குத் தெரிந்தவரை இதற்கு முன் இரண்டு தடவைகள் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்திருந்தோம். அதேபோன்று மூன்றாவது தடவையாக இம் முறையும் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்திருக்கிறோம்.

நாங்கள் கடந்த இரண்டு தடவைகளிலும் கொழும்பில் வாழும் தமிழ் மக்களை மனோ கணேசனுக்கு ஆதரவாக வாக்களிக்கச் சொல்லி கேட்டிருக்கிறோம். இந்தத் தடவையும் அதற்கு மாறாக நாங்கள் செயற்படவேண்டிய அவசியம் கிடையாது. கொழும்பு வாழ் தமிழ் மக்கள் மனோ கணேசனை ஆதரிக்கும்படியாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் விடுதலைப் பயணத்தில் பல சிக்கலான காலகட்டங்கள் எழுந்ததுண்டு. விசேடமாக வெள்ளைவானில் கடத்தப்படுவதும் ஆட்கள் காணாமலாக்கப்படுவதுமான ஒரு காலகட்டம் இருந்தது. அந்தக் கால கட்டத்திலே ரவிராஜ், மனோ கணேசன் போன்றவர்கள் ஒரு ஆணைக்குழுவை அமைத்து கொழும்பில் செயற்பட்டார்கள். அவர்களுடைய செயற்பாடுகள் காரணமாக பல நூறு இளைஞர்கள் காப்பாற்றப்பட்டார்கள். அந்த நன்றியை நாங்கள் மறந்தலாகாது.

இந்தக் கால கட்டத்தில்தான் ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டதற்குப் பிறகு மனோ கணேசனுடைய பாதுகாப்பு விலக்கப்பட்டது. அவர் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருந்தது. ஆகையினால் அவருக்கு மீளப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்படவேண்டியதாக இருந்தது. நான் அப்போது அரசியலில் இருக்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக அவர் என்னை வந்து சந்திப்பதற்கு கூட வீதியில் இறங்கி வர முடியாத காலகட்டம் இருந்தது. அதனால் சட்டத்தரணிகளுக்கான எல்லா மரபுகளையும் மீறி நான் தனியாக வாகனத்தை எடுத்துச் சென்று அவரைச் சந்தித்து அவருக்காக ஒரு வழக்கு தாக்கல் செய்தேன். ஏனென்றால் அவர் எங்களுடைய இளைஞர்களுக்காக மிகவும் துணிவோடு செயற்பட்ட ஒருவர்.

இந்தத் தேர்தலிலே இது மட்டுமல்ல வேறு பல பொய்யுரைகள் பல மோசமான செய்திகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மிக மிக மோசமான செய்திகள் வெளியிடப்படுவது நாங்கள் கையைப் பிடித்து அழைத்து வந்து ஒரு கதிரையில் அமர்த்தி அழகு பார்த்த முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனால்தான். அவர் தான் யார் என்பதை மறந்து யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுடைய வாக்குகளைச் சிதறடிப்பதற்காக தன்னுடைய சம்பந்தி கூடப் போட்டியிடுகிறார். அதாவது அவரது சம்பந்தியான வாசுதேவ நாணயக்காரவின் கட்சியும் யாழ்ப்பாணத்தில் மட்டும் போட்டியிடுகின்றது.

மேலும் அரசில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் அரசியல் கட்சி யாழ்ப்பாணத்தில் மட்டும் போட்டியிடுகிறது என்றால் சம்பந்திக்கு சம்பந்தி துணை. இரண்டு பேரும் இரண்டு கட்சியை வைத்து தமிழ் மக்களுடைய பலத்தைச் சிதறடிப்பதற்காக இங்கே போட்டியிடுகிறார்கள். இந்த நிலையில் ராஜபக்ஷக்களுடன் எங்களுக்கு டீல் ஒன்று இருப்பதாக விக்கினேஸ்வரன் சொல்லுகிறார். ஆக அவர் எப்படியான ஒரு மனிதன். நாங்கள் ஏமாந்தது பல தடவைகளாக இருந்தாலும் இவர் விடயத்தில் அதாவது இதைப் போல ஏமாந்தது வேறு எந்தத் தடவையும் கிடையாது.

கொடுத்த கையைக் கடிக்கமாட்டேன் என்றவர் இன்றைக்கு கடித்து கடித்துக்கொண்டு சொல்கிறார் கர்ணணைப் போல நான் செஞ்சோற்றுக் கடனாக இருக்க மாட்டேன் என்றும் அவர்களுக்கு எதிராகத் தான் நான் இருப்பேன் என்றும் கூறுகின்றார். செஞ்சோற்றுக் கடன் ஒன்று இருக்கிறதையாவது மனுசன் ஞாபகத்தில் வைத்திருக்கிறது.

தன்னுடைய பதவிக் காலம் முடிவடைகிற வரைக்கும் அதாவது பதவியின் கடைசி நாள் வரைக்கும் கூட்டமைப்பின் முதலமைச்சராகத் தான் அவர் இருந்தார். அந்தப் பதவி அந்தக் கதிரை அவருக்கு அவ்வளவு முக்கியமானதாக இருந்தது. அதுவரைக்கும் கூட்டமைப்பின் கொள்கைதான் என்னுடைய கொள்கை என்று சத்தியம் பண்ணிச் சொன்னார்.

2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையை ஒழுகிதான் நான் நடக்கிறேன் என்றார். என்னுடைய கொள்கையும் அது என்றும் சொன்னார். அப்படிச் சொன்னவர் ஒரே இரவிலே புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்தார். அவ்வாறு கட்சியை ஆரம்பித்ததாக ஒரு பெயரைச் சொன்னார். பிறகு வேறொரு பழைய அரசியல் கட்சியை எடுத்து அதற்கு லேபிளை பெயரை சின்னத்தை மாற்றி புலிக்கொடி எல்லாம் இறங்கிவிட்டது இனி பாண்டியமன்னனின் மின் கொடி தான் பறக்கப் போகின்றது என வாய் கூசாமல் சொல்லிக் கொண்டு திரிகின்றார்.

ஆகவே நான் இங்கே நல்லூரடியில் வைத்து தமிழ் மக்களிடத்தே கேட்கவேண்டிய ஒரு கேள்வி இருக்கிறது. அதாவது அவருடைய உருவத் தோற்றத்தைக் கண்டு யாரும் மயங்கி அவருக்கு வாக்களிக்காதீர்கள். அவர் யார் என்கின்ற உண்மை எங்கள் எல்லாருக்கும் தெரிந்ததாகவே இருக்கிறது.

குறிப்பாக இந்தியப் பிரதம மந்திரி நரேந்திரமோடி இலங்கைக்கு வந்த போது எத்தனையோ முக்கியமான கோரிக்கைகள் எல்லாவற்றையும் நாங்கள் முன்வைத்தோம். அதில் பிரதானமாக அரசியல் தீர்வைப் பற்றியெல்லாம் நாங்கள் அவருடன் பேசினோம். ஆவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் சமஷ்டியில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லுற அளவிற்கு நாங்கள் நிலைமை கொண்டு வந்திருந்தோம். . வீட்டுத் திட்டம் காணாமலாக்கப்பட்டவர்கள். அரசியல் கைதிகளின் விடுதலை என பல விடயங்கள் சம்மந்தமாக நாங்கள் பேசினோம். மிக முக்கியமாக எங்களுடைய தீர்வைப் பற்றிய விடயத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தம் குறித்தும் அதில் இந்தியா கொடுத்த அழுத்தங்கள் பற்றியும் அவரோடு பேசினோம். அதனுடைய விளைவுகளை இன்றைக்கும் நாங்கள் பார்க்கிறோம்.

பக்கம் 10 ›››

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் ஆணையாளரின் ஓய்வு

தேர்தல் திருவிழாவின் முக்கிய அங்கமான பிரசார ஆரவாரம் ஓய்ந்தது. இன்றும் நாளையும் அமைதி நாள்கள். நாளை மறுதினம் வாக்களிப்பு. அடுத்தநாள் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமாகும். அன்று மாலைக்குள் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் நிலைமை தெளிவாகும். அடுத்தநாள் விருப்பு வாக்குகள் எண்ணப்படும் போது. நாடாளுமன்றத்துக்குச் செல்லும் உறுப்பினர்களின் விவரம் தெரியவரும். அதுவரையில் தேர்தல் திருவிழா தொடரும்.

வழக்கமான தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இதுவரைப் பெரும் வன்முறைகள் இல்லை. தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள், முறைப்பாடுகள் தாராளம். எனினும் முன்னைய தேர்தல்களோடு ஒப்பிடுகையில் தேர்தல் வன்முறைகள் மிகமிகக் குறைவு.

வழக்கமாகத் தென்னிலங்கையில் இரண்டு பிரதான கட்சிகள்தான் போட்டியிடும். ஆனால் இப்போது பிரதான கட்சிகளிலும் பிளவு. அதுபோலவே வடக்கு, கிழக்கிலும் தமிழர் தேசியம் பேசும் தரப்புகள் பல முனைகளில் களம் இறங்கியிருக்கின்றன.

அதனால் - கட்சிகள் பிளவுண்டு நிற்பதால் - வன்முறைகள் வெடிக்கலாம் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால், களநிலைமை - யதார்த்தம் - எதிர்பார்க்கப்பட்டதை விட மேம்பாட்டதாக இருக்கின்றது.

தற்போதைய சுயாதீன தேர்தல் ஆணையத்தின் பதவிக் காலம் வரும் நவம்பருடன் காலாவதியாகின்றது. அதன் பின்னர் புதிய சுயாதீன தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இருக்கின்ற தேர்தல் ஆணையாளர்களின் பதவி அத்தோடு பெரும்பாலும் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் தேர்தல்களோடு சுமார் நான்கு தசாப்த காலம் தம்மைப் பிணைத்துப் பணியாற்றிய தேர்தல் ஆணையத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இந்தத் தேர்தல் முடிய அடுத்த மாதத்தில் முற்கூட்டியே ஓய்வில் செல்லவிருக்கின்றார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமது ஆணையத் தலைமைப் பதவியில் கம்பீரமாகக் காட்சி தந்த மஹிந்த தேசப்பிரிய, இந்தப் பொதுத் தேர்தலை ஒட்டிய விடயங்களில் ஆணையத்தின் தனித்துவதையும், ஆளுமையையும், தற்துணிவு அதிகாரத்தையும் தொலைத்தவராக - அதிகார வறுமை மிக்கவராக - விவகாரங்களைக் கையாள்வதில் காட்சியளித்த நிலையிலேயே பதவியில் இருந்து இறங்குகின்றார்.

இலங்கையின் சரித்திரத்திலே சுயாதீனமான - தற்றுணிவு அதிகாரம் மிக்க - முதலாவது தேர்தல் ஆணையத்துக்குத் தலைமை தாங்கும் அரிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. 19ஆவது அரசமைப்புத் திருத்தம் தந்த அந்த அதிகாரத்தை முழு அளவில் பயன்படுத்தும் சந்தர்ப்பம் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அவருக்கும் அவரது ஏனைய - சக - ஆணையாளர்கள் இருவருக்கும் கிட்டியது.

இந்தத் பொதுத்தேர்தல், கொரோனாத் தொற்றுப் பேரிடர் என்ற சர்ச்சையினால் இழுபறிபட்டு, நீதிமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகார கையாளுகைக்கு அது தொடர்பான விடயங்கள் உட்பட்டு இழுபறிப்பட்டமையினாலோ என்னவோ இந்தத் தேர்தலை முழு கட்டுறுதியோடும் ஆளுமையாடும் கையாள்வதில் தேர்தல் ஆணையத்தில் ஒரு தடுமாற்றம் - அதிகாரக் குழப்பம் - இருந்தமையை அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் விதிமுறை மீறல்கள், முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளைக் கையாள்வதில் குழப்பமும், முரண்பாடுகளும், தேவையற்ற தாமதங்களும், பின்னடிப்புகளும் காணப்பட்டமை கண்கூடாகத் தெரிந்தது.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட உச்சபட்ச - சுயாதீன - சுதந்திர - தற்துணிவு - அதிகாரங்களைப் பிரயோகித்துத் தேர்தல் நடத்துவதற்கு சுயாதீன ஆணைக்குழுவுக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பாகவும் இது அமையக்கூடும்.

புதிதாக ஆட்சிப் பீடத்துக்கு வரக்கூடிய தரப்புகள் அரசமைப்பை மாற்ற - குறிப்பாக 19ஆவது அரசமைப்புத் திருத்த ஏற்பாடுகளைத் தூக்கிக் கடாச - உறுதியாகத் துடித்துக் கொண்டிருக்கும் நிலையில், மீண்டும் ஒரு தேர்தலை இப்படிச் சுயாதீன அதிகாரங்களோடு நடத்தும் வாய்ப்பு இன்னொரு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிட்டுமோ தெரியவில்லை.

அந்தப் பின்புலத்தில்தான் இதுவரை கம்பீரமாகத் தன் பணியில் விளங்கிய மஹிந்த தேசப்பிரிய, ஒரு தடுமாற்ற சூழலில் இப்போது - இந்தத் தேர்தலோடு - பதவி விலகத் தயாராகின்றார் .

# சம்பந்தன், மாவைக்கு வயதாகவில்லையா? விக்னேஸ்வரனுக்குத்தான் தள்ளாத வயதா?

## சுமந்திரனிடம் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி





யாழ்ப்பாணம், ஓக.03

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் பிரசார இறுதிப் பரப்புரைக் கூட்டம் இன்று கல்வியங்காட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், சிறீகாந்தா மற்றும் அருந்தவபாலன், சிவகுமார், சிற்பரன், மீரா அருள்நேசன், அனந்தி சசிதரன் ஆகிய வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்களுடைய நலன்களைக் காப்பார்கள், எதிர்காலத்தை திட்டமிட்டு செப்பனிடுவார்கள் என்று பல்வேறுபட்ட உறுதிமொழிகளைக் கொடுத்த பின்னர்தான் நாங்கள் அவர்களை நம்பி வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பினோம். அந்தப் பிரதிநிதிகள் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் கைவிட்டு அரசாங்கத்தை காப்பாற்றினால் போதும் என்ற ஒரு அடிப்படையையும் தமது நலன்களை பாதுகாப்பதையுமே இன்று முதன்மையாக கொண்டுள்ளார்கள்.

கடந்த அரசாங்கத்தில் நாங்கள் கொண்டு வந்த ஜனாதிபதி எமது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவார்கள் என்று சம்பந்தன் ஐயா கூறிவந்தார். ஆனால் எதையும் சாதித்ததாக இல்லை.

இன்று பத்திரிகையில் தெரிவிக்கின்றார் அடுத்த ஆண்டுக்குள் புதிய அரசியல்சானத்தை கொண்டு வருவோம் என்று. புதிய அரசியலமைப்பு தீபாவளிக்கு வருகின்றது, பொங்கலுக்கு வருகின்றது என்று மாறி மாறி எங்களை ஏமாற்றி கொண்டு இருந்த நிலையில் இன்று எந்த ஒரு அரசியலமைப்பும் வரவுமில்லை, தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமைகள் கூட இல்லாத நிலையில் தான் இருக்கின்றார்கள். ஆனால் தங்களை இன்னொரு முறை நாடாளுமன்றம் அனுப்புங்கள் என்று வாக்கு கேட்டு வருகின்றார்கள்.

சம்பந்தன் ஐயா கொழும்பில் இருந்து வெளியாகும் வார பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிடுகின்றார், அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டேன், அடுத்த ஆட்சியாளர்களுடன் நம்பிக்கையுடன் பேசுவோம், நிரந்தர அரசியல் தீர்வுக்காக புதிய ஆரம்பம் அவசியமாகிறது, எமது கட்சியுடன் விக்னேஸ்வரனை ஒப்பிட முடியாது, அமைச்சுப் பதவிகளை பெறுவதில் தீர்மானமில்லை என்ற விடயங்களை குறிப்பிடுகின்றார்.

நான் ஒரு விடயத்தை சம்பந்தன் ஐயாவிடம் கேட்க விரும்புகின்றேன். அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று கூறுகின்றீர்கள். ஆனால் எதையும் நிறைவேற்றியதாக தெரியவில்லை. வடக்கு –கிழக்கு இணைப்பை கைவிட்டார், சமஷ்டி அரசியலமைப்பு முறை என்பதை கைவிட்டுவிட்டார், பௌத்தத்திற்கு முதலிடம் என்பதை ஏற்றுக் கொண்டார். இவை அனைத்தையும் கைவிட்டு விட்டுத்தான் புதிய அரசியல் சாசன வரைவை எழுதினார்கள். ஆகவே, அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்பதை பற்றி கூறுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

அடுத்த ஆட்சியாளர்களுடன் நம்பிக்கையுடன் பேசுவோம் என்கின்றார் சம்பந்தன். அதேசமயம் சுமந்திரன் கூறுகின்றார் மகிந்த ராஜபக்ஷவுக்குக் கன்னத்தில் அறைந்தது போல் எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கூறுகின்றார். சம்பந்தனுக்கும் அவரது பேச்சாளரான சுமந்திரனுக்கும் இடையிலேயே முரண்பாடு அதிகம். இவர்கள் தான் எங்களுக்காக அரசாங்கத்துடன் பேசப்போகின்றோம் என்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, சம்பந்தன் கூறுகின்றார் நாங்கள் அமைச்சுப் பதவிகளை பெறுவதில் தீர்மானம் இல்லை, சிலசமயங்களில் எதிர்காலத்தில் தீர்மானங்களை எடுக்கக் கூடும். சுமந்திரன் தங்களை வலுவான ஓர் அணியாகத் தங்களை நாடாளுமன்றம் அனுப்புங்கள் அமைச்சுப் பதவிகளை பெறுவதற்கு என்று கூறுகின்றார்.

இவ்வளவு காலமும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக பேசுவதாகக் கூறிக்கொண்டிருந்தீர்கள். இல்லா விட்டால் மக்களை ஏமாற்றி அரசாங்கத்துடன் கள்ள உறவுகளை பேணிக் கொண்டிருந்தீர்களா என்பது தான் எனது மிகப்பெரிய கேள்வியாக உள்ளது.

சுமந்திரன் கூறினார் புதிய அரசியல் சாசனம் வராவிட்டால் அதற்கான பொறுப்பை ஏற்று நான் இராஜினாமா செய்துவிடுவேன் என்றார். அதன் பிற்பாடு நாடாளுமன்றில் இருக்க மாட்டேன், புதிய அரசியல் யாப்பு வந்தால் அதற்கு பின்னர் அரசியலில் எந்த தேவையும் இல்லை, ஆகவே அவர் புதிய அரசியல் யாப்பு கொண்டு வருவதற்காகதான் வந்தார் எனவும், அது வராவிட்டால் அதற்கான முழு பொறுப்யையும் ஏற்றுத் தான் விலகி விடுவார் என்று கூறினார். அது மாத்திரமல்ல, தனது இராஜி னாமா கடிதத்தின் அரை வாசியை எழுதி முடித்து விட்டேன் என்றும் கூடக் கூறினார்.

அமெரிக்க தூதரகத்தில் இருந்து ஒரு பிரதிநிதி என்னுடன் பேசுகையில் அவர் நகைச்சுவையாக கேட்டிருந்தார் சுமந்திரன் தனது இராஜினாமா கடிதத்தினை எழுதி முடித்து விட்டாரா என்று. அவர் எழுதிக் கொண்டிருப்பதாக கேள்விபட்டேன் என எனது பதிலை வழங்கியிருந்தேன்.

தள்ளாத வயதில் நாடாளுமன்றம் போவதற்காக வந்திருக்கக் கூடிய விக்னேஸ்வரனை தோற்கடியுங்கள் என்று சுமந்திரன் பேசியிருக்கின்றார். நான் ஒன்றை சுமந்திரனிடம் கேட்க விரும்புகின்றேன். சம்பந்தன் ஐயாவால் இருந்தால் எந்திருக்க முடியாது, காது சரியாக கேட்காது. இவ்வாறு அவரால் எதுவுமே முடியாத ஒரு சூழ்நிலையில் சம்பந்தன் ஐயா போட்டியிடுவது கண்ணுக்கு தெரியவில்லையா? மாவைக்கு வயது 77. அவர் என்ன பேசுகிறார், என்ன செய்கின்றார் என்பதே அவருக்கு தெரியாது. ஆனால் அவர் போட்டியிடுகின்றார். இவர்கள் வயதானவர்கள் இல்லையா? நவக்கிரகங்கள் போலே தமிழரசுக் கட்சியில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவருடன் நேருக்கு நேரே பார்த்து பேசிக் கொள்வதே கிடையாது.

எனவே, நாம் சரியான தீர்வு தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும், நமது உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண்டும், தமிழன் எமது மண்ணில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும், சர்வதேச நீதிமன்றின் மூலம் சரியான ஒரு தீர்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே எமது இந்த கூட்டணி விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையின் கீழ் இன்று பேட்டியிடுகின்றோம். – என்றார்.

# அரசுகளுடன் 'டீல்' பேசி ஒட்டுக்குழுவை இயங்கச் செய்த துரோகியே ஸ்ரீகாந்தா!

## போட்டுத் தாக்குகின்றார் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஓக.03

சிறிகாந்தா 10 வருடங்களுக்கு முன்னர்தான் தமிழ்த் தேசியம் பேசத் தொடங்கியவர். அதற்கு முன்னர் இவர் இலங்கை அரசுகளுடன் 'டீல்' பேசி ரெலோவை ஒட்டுக்குழுவாக இயங்கச் செய்தவர். இவர் ஒரு தமிழினத் துரோகியாவார்.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான ஈ.சரவணபவன்.

யாழ்.ஊடக மையத்தில் நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இரண்டு வருடங்களுக்கு முன்பு ராஜபக்ஷக்களுடன் 'டீல்' பேசிய நண்பர் சரவணபவன் இப்போது எங்களுக்கு எதிராக 'டீல்'களைப் பிரஸ்தாபித்து 'றீல்' விடுகின்றார்' என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி ந.சிறீகாந்தா யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். அதற்கு இன்று பதில் வழங்கும்போதே சரவணபவன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகள் எல்லாம் பிசுபிசுத்துப் போய்விட்டன. நாம் செய்த சேவைகளை மக்கள உணர்வுபூர்வமாக உணர்கின்றனர். இப்போது வெற்றி அலை எம்மை நோக்கி வருகின்றது.

கூட்டமைப்புக்கும் அரசுக்கும் 'டீல்' என்று கூறும் விக்னேஸ்வரன், முதலமைச்சராக வந்தவுடன் கொழும்புக்குச் சென்று சம்பந்தி வாசுதேவவுடன் போய் மஹிந்தவைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றவர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா சத்தியப்பிரமாண வைபவத்துக்கு ஏற்பாடுகளைச் செய்து எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோது அங்கே போய் இரகசியமாக மஹிந்த முன் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.



இந்த வாசுதேவவும் மஹிந்தவும் அளித்த ஊக்கத்தால்தான் அவர் முதலமைச்சராக இருந்துகொண்டே கூட்டமைப்புக்கு விரோதமாகச் செயற்பட்டார். கூட்டமைப்புக்கு அவப்பெயரை உண்டு பண்ணுவதே இவரின் நோக்கம்.

விடுதலைப்புலிகளை ஒழித்தது போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் வாசுதேவ நாணயக்கார மஹிந்த ராஜபக்ஷக்களின் முழு ஆதரவுடனேயே விக்னேஸ்வரன் தனிக்குழுவை அமைத்து இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இதுவரை அங்கஜன், டக்ளஸும்தான் கோட்டாவின் கைக்கூலி என்று நினைத்தோம். ஆனால், இந்த விக்னேஸ்வரனும் இனவாதிகளான ராஜபக்ஷக்களின் கைக்கூலி என்பது தெரியவந்துள்ளது.

முன்பு இந்த விக்னேஸ்வரன் ஒரு வழக்கை எடுத்தால் வழக்காளி இறந்த பின்தான் தீர்ப்பு வழங்குவார் என்று கூறிய அதே சிறிகாந்தாதான், இப்போது விக்னேஸ்வரனுக்கு காவடி தூக்குகின்றார்.

சிறிகாந்தா 10 வருடங்களுக்கு முன்னர்தான் தமிழ்த் தேசியம் பேசத் தொடங்கியவர். அதற்கு முன்னர் இவர் இலங்கை அரசுகளுடன் 'டீல்' பேசி ரெலோவை ஒட்டுக் குழுவாக இயங்கச் செய்தவர். அப்போது செல்வம் அடைக்கநாதன் இங்கில்லை. இந்தியாவில் இருந்தார். ஆனால், சிறிகாந்தாதான் ரெலோவின் முதல்வர் என்ற பதவியில் இருந்தார். அவர்தான் அப்போது ரெலோவின் முடிவுகளைத் தீர்மானித்து வந்தார். அப்படியென்றால் அரசுடன் 'டீல்' வைத்தது யார்? பின்னர் செல்வத்தைக் கூப்பிட்டு கூட்டமைப்பை ஆரம்பிக்கப் பேச்சு நடந்தது. அதன்பின்னர் அரசை விட்டு விட்டு ஓடி வந்து இங்கே கூட்டமைப்புடன் ஒட்டியவர்தான் சிறிகாந்தா.

இங்கு வந்த அவரை தமிழீழ பிரபாகரன் மன்னித்து கூட்டமைப்புடன் சேர்ந்து இயங்க அனுமதித்தார். இப்போது கொஞ்ச நாளாகதான் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுகின்றார். அதற்கு முன்னர் இந்திய இராணுவத்துடனும் அதன்பின் இலங்கை இராணுவத்துடனும் இணைந்து தமிழரை 'வெட்டு', 'கொத்து', 'சுடு' என்ற கொள்கையில்தான் இருந்தார். இவர் ஒரு தமிழினத் துரோகியாவார்.

தன்னை ஒரு சட்டத்தரணி என்று கூறிக்கொள்ளும் சிறிகாந்தா என்ற இப்போது 'டீல்' என்றும், ஒப்பந்தம் என்றும் ஏதோ பிதற்றுகின்றார். வாக்குக்காக இல்லாததையெல்லாம் சொல்லிப் புலம்புகின்றார். அவருடைய வார்த்தையை நேர்மையைப் பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். அதைவிட வடக்கில் உள்ள கிரிமினல்களின் ஆஸ்தான சட்டத்தரணியான சிறிகாந்தா வாயைத் திறந்தாலேயே பொய் மட்டுமே பேசும் மனிதர். இப்போது அந்த வழக்கத்தை எமக்கு எதிரான ஆதாரமற்ற அவதூறுகளைப் பரப்புவதிலும் பயன்படுத்துகின்றார். இப்படியான பொய்யர்களுக்கு பதில்சொல்லிக்கொண்டு இருப்பது நேரத்தை வீணாக்கும் செயலே. உண்மை என்ன என்பதை மக்கள் நன்கறிவார்கள் – என்றார்.

# தமிழ்க் கூட்டமைப்பு காலாவதி; மாற்று அணி ஏமாற்று! பலமான கூட்டு முன்னணிக்கு இத்தேர்தல் வழிகாட்டும்

## 'மாம்பழம்' ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவிப்பு



தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை யுத்தத்திற்குப் பின்னர் ஜனநாயக முறையில் முன்னெடுப்பதற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவறிவிட்டது. இனி மேலும் தமிழர் அரசியலுக்குத் தலைமை தாங்க முடியாதவாறு அது காலாவதியாகி வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிடத்துக்குத் தாங்கள் தான் மாற்று என்று கூறிக்கொள்ளும் வடக்கின் முன்னாள் அமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவின் அணியும் ஏமாற்றம் தருவதாக உள்ளது. அவர் உருவாக்கியுள்ள அணி இந்தத் தேர்தலுக்கான கூட்டணி ஆகும். இந் நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் தமிழத் தேசிய அரசியலை முன்னெடுக்க வல்ல கொள்கைப் பிடிப்புள்ள பலமான கூட்டு முன்னணி ஒன்று உருவாகுவதற்கான வழியைக் காட்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கின் முன்னாள் விவசாய அமைச்சரும் நாடாளுமன்ற வேட்பாளருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இந் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சை அணியாக மாம்பழம் சின்னத்தில் போட்டியிடுகின்றது. இதன் பரப்புரைக் கூட்டம் நேற்று இரவுஞாயிற்றுக்கிழமை (02.08.2020) உடுப்பிட்டியில் நடைபெற்ற போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்–


விடுதலைப் புலிகள் முள்ளிவாய்க்காலில் தோற்கடிக்கப்பட்டதற்குப் பிறகு தமிழ் மக்களை வழி நடத்த வல்ல சரியான தலைமை இல்லாமற் போய்விட்டது. தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தலைமையாக நம்பியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் எதேச்சாதிகார முடிவுகளால் தானாகவே அழிந்து வருகிறது. ஆனால் தங்களைஅழிப்பதற்காகவே பல கட்சிகளும் சயேச்சைகளும் இத்தேர்தலில் போட்டிபோடுவதாக அவர்கள் மேடைக்கு மேடை பேசி வருகிறார்கள்.

கூட்டமைப்பின் மீது மக்கள் அவ நம்பிக்கை கொண்டிருப்பதால் அவர்களுக்குக் கடந்த காலங்களில் கிடைத்த வாக்குகள் இந்த முறை கிடைக்காது என்பது திண்ணம். ஆனால் சிதறுகின்ற இந்த வாக்குகள் எவரை பலப்படுத்த கூடாது எவரைப் பலப்படுத்த வேண்டும் என்பதில் மக்கள் தெளிவாக இருத்தல் வேண்டும். சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கு வாக்களிப்பது இக்கட்சிகளின் ஆட்சிகாலத்தில் நிகழ்ந்தேறிய இனப்படுகொலையை சரி என்று நாங்கள் ஏற்றுக் கொண்டதாகிவிடும்.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கொள்கையை முன்னிறுத்தும் கட்சிகளில் இருந்து நேர்மையான ஆளுமையான கொள்கைப் பிடிப்புள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இந்தத் தேர்தலில் எந்த கட்சிக்கும் ஏக பிரதிநிதித்துவத்தை மக்கள் வழங்க மாட்டார்கள். தமிழ்த் தேசியக் கட்சிகளில் வெற்றிப் பெறும் வேட்பாளர்கள் கட்சிவேறுபாடுகள் கடந்து ஒன்றாகத் தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்க வேண்டும். இதுவே பலமான ஒரு கூட்டு முன்னணி உருவாகுவதற்கான தொடக்கமாக அமையும். தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் இதற்கான பரிபூரண ஒத்துழைப்பை வழங்கும். – எனவும் தெரிவித்தார்.

# இப்போது தள்ளாடும் வயதில் நான் இல்லை ஆனாலும் சுமந்திரனைத் தள்ளி விடுவேன்!

## கடைசிப் பிரசாரக் கூட்டத்தில் விக்கி உறுதி



திருநெல்வேலி,ஓக.03

தாம் தற்போது 'தள்ளாடும்' வயதில் இல்லை என்று கூறியுள்ள நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், ஆனால் தாம் தமது மாணவனாகிய சுமந்திரனை நாடாளுமன்ற அரங்கிலிருந்து 'தள்ளி' விடுவார் என்று கூறியிருக்கின்றார்.

நேற்றிரவு திருநெல்வேலியில் நடந்த நமது கூட்டணியின் கடைசிப் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தள்ளாடும் வயதிலும் எம். பி. பதவிக்காக அலையும் விக்கி" என சுமந்திரன் தெரிவித்தார் என்று 'காலைக்கதிர்' பத்திரிகையின் மாலைப்பதிப்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக விக்கினேஸ்வரன் அங்கு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்–

"எனக்கு இப்போது 'தள்ளாடும்' வயதில்லை. ஆனால் 'தள்ளிவிடும்' வயது. யாரை தள்ளிவிடப் போகின்றேன்? எமது மாணவனாகிய சுமந்திரனை நாடாளுமன்ற அரங்கிலிருந்து தள்ளிவிடப் போகின்றேன். தற்போது அவரைத் தள்ளிவிடும் அவசியம் ஏற்பட்டுள்ளது. அவர் எமது தமிழ் மக்களை அதல பாதாளத்திற்குள் தள்ளிவிடப் பார்க்கின்றார். நான் வெற்றி பெற கூடாது என அவர் கூறுவது, தான் நினைத்தது போன்று மக்களை அகால பாதாளத் திற்குள் தள்ளிவிடுவதற்காக. நாம் அதற்கு இடமளிக் கமாட்டோம் என்பதனை நான் எனது இந்த வயதில் கூறுகின்றேன். எந்த வயதிலும் கூறுவேன். – என மேலும் தெரிவித்தார் விக்னேஸ்வரன்.

காலைக்கதிர் Kalaikkathir

## கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம்:

# மதகுருமார்களை ஒன்றிணைத்து கொழும்பைச் சுற்றிவளைப்போம்

### ராஜபக்ஷக்களின் இராணுவத்திற்கு அஞ்சோம் என ஞானசாரர் அறிவிப்பு



கொழும்பு,ஓக.03

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு இன்று அரசாங்கம் உரிய தீர்வை வழங்காவிட்டால், ஆயிரக்கணக்கான பௌத்த மதகுருமார்களை ஒன்றிணைத்து கொழும்பைச் சுற்றிவளைப்போம் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கடந்த அரசாங்கத்திலும் கிழக்கு முனையம் தொடர்பாக ஒப்பந்தம் செய்வதற்கு முயற்சிக்கப்பட்ட போதிலும் அதனை முதுகெலும்புள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்தார்.

"ஆனால் தற்போதுள்ள ஒப்பந்தத்தில் நூற்றுக்கு 51 சதவீதம் இலங்கைக்கும் 49 சதவீதம் ஏனைய நிறுவனங்களுக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 51 சதவீதத்திற்குள் இரு நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன.

"அந்த இரு நிறுவனங்கள் ஜோன்ஸ்டனுடையவையா? பி.பி.ஜய சுந்தரவினுடையவையா? அல்லது நாமலுடையவையா? இதனை நாட்டுக்கு வெளிப்படுத்துங்கள். ஏன் அரசாங்கம் இது பற்றி தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த தாமதிக்கிறது? தேர்தலுக்கு முன்னர் இதனை வெளிப்படுத்துங்கள்.

"தேர்தலுக்கு முன்னர் அரசாங்கமும் எதிர்கட்சிகளும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினால் எஞ்சியுள்ள இரு தினங்களில் மக்களுக்கு சுதந்திரமாக சிந்தித்து வாக்களிக்க முடியும்.

"உள்நாட்டு துறைமுக சேவையாளர்களுக்கு இங்கு அனைத்து சேவைகளையும் ஆற்ற முடியுமாக இருக்கின்ற போதிலும் ஏன் வெளிநாட்டுக்கு விற்க முனைகிறீர்கள்? இதன் பின்னணியில் யார் உள்ளனர்? அரசாங்கம் இவ்வாறு செயற்பட்டால் மூன்றில் இரண்டு மாத்திரமல்ல. தற்போதுள்ள பெரும்பான்மையும் இல்லாமல் போகும். தேசிய சொத்தினைப் பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர்.

"இந்த பிரச்சினைக்கு தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் பதிலளிக்கவில்லை என்றால் நூற்றுக்கணக்கான பௌத்த மத குருமார்களை ஒன்றிணைத்து கொழும்பை சுற்றி வளைப்போம். ராஜபக்ஷக்களின் இராணுவத்திற்கு நாம் அஞ்சப் போவதில்லை. எம்மால்தான் அவர்கள் அந்த நிலைமையில் உள்ளனர் என மேலும் தெரிவித்தார்.

## அதிக தேர்தல் சட்ட மீறல்கள் வட மாகாணத்தில்தான் பதிவு!

### தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குற்றச்சாட்டு




2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், அதிக எண்ணிக்கையான தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள் வட மாகாணத்தில் பதிவாகியுள்ளன எனத் தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முயற்சி (வியூ) தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முயற்சியின் ஒன்றிணைந்த செயற்குழு உறுப்பினர் ஆதில் அலி சப்ரி, வடமாகாண அலுவலகத்தில் இடம்பெற்ற தேர்தல் கண்காணிப்பாளருடனான சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக நாடளாவிய ரீதியில் 3,000இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில் அரைவாசிக்கு அதிகமானவை வட மாகாணத்தில் பதிவாகியுள்ளன. அந்த வகையில் வட மாகாணத்தில் 1,800 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது.

சட்ட விரோத பரப்புரை நடவடிக்கைகள், வாக்காளர்களுக்கு பணம் வழங்குதல், வாக்காளர்களை மத நீதியான சுற்றுலாக்களுக்கி அழைத்துச் செல்லல், கட்சியின் பெயர், இலக்கம் பொறிக்கப்பட்ட பத்திரங்களை விநியோகித்தல், தனிமைப்படுத்தல் சட்ட ஒழுங்குகளை மீறல், சட்டவிரோத வாகன பேரணிகள் போன்ற தேர்தல் சட்ட மீறல்கள் சம்பவங்கள் வட மாகாணத்தில் அதிகளவாகப் பதிவாகியுள்ளன.

அமைதிக் காலம் மற்றும் தேர்தல் தினத்திலும் பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்ள சில கட்சிகளும் வேட்பாளர்களும் திட்டமிட்டுள்ளமை குறித்த தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே பொலிஸார் பக்கச் சார்பின்றிச் செயற்பட வேண்டும்.

'தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்காத சில சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. அவை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்திட்டுள்ளோம். பிரஜைகளிடமிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக பிரஜைகள் முறைப்பாடுகளை மேற்கொள்வது நல்ல முன்னேற்றமாகும். தேர்தலின் போது பிரஜைகள் தன்னார்வ அடிப்படையில் முறைப்பாடுகள் மேற்கொள்வதை ஊக்குவிப்பதே வியூ அமைப்பின் பிரதான நோக்கமாகும்.'

இதேவேளை, தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முயற்சியானது (வியூ) அப்ரியல் இளைஞர் வலையமைப்பு, இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம், ஜனநாயகத்துக்கான இளைஞர் ஒன்றியம் மற்றும் ஜன நாயகத்துக்கான இளம் சட்டத்தரணிகள் ஒன்றியம் ஆகிய நான்கு அமைப்புகளின் கூட்டாக கட்டமைக்கப்பட்டதாகும்.

## கூட்டமைப்புக்குள் உடைவில்லை மக்கள் அதை உணர்த்துவார்கள்

### சங்கிலியன் பூங்காவில் சரா முழக்கம்

(பிரபாகரன் டிலக்ஸன்)

யாழ்ப்பாணம், ஓக. 03

கூட்டமைப்பின் தலைமைப் பதவி கிடைக்காதனாலேயே நீதியரசர் விக்னேஸ்வரன் தனித்துச் சென்று கட்சி ஒன்றை ஆரம்பித்தார். கட்சியை உடைக்க நினைத்தார். ஆனால் கட்சி உடைந்துள்ளதா, இல்லையா என்பதை மக்கள் இந்தத் தேர்தலில் உணர்த்துவார்கள் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் சரவணபவன் தெரிவித்தார். நேற்று மாலை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று மாலை நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்பிற்கு ஐந்து ஆசனங்கள் உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஆறாவது ஆசனமும் கிடைக்கக் கூடிய கள நிலவரம் காணப்படுகின்றது. யாழ் தேர்தல் மாவட்டத்தில் 330 வேட்பாளர்கள் அரைவாசி வேட்பாளர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகள். உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் எல்லாவிதமான கௌரவத்தையும் இழந்து எல்லோரையும் விமர்சித்து வருகிறார். இறுதியாகக் கூட்டமைப்பு மஹிந்த ராஜபக்ஷவுடன் டீல் வைத்துள்ளதாக விக்னேஸ்வரன் கூறுகின்றார். தான் என்ன செய்யப் போகின்றேன் என்பதைப் பற்றிப் பேசாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது பிழை பிடித்துக் கொண்டு அதனை வைத்து அரசியல் செய்து வருகின்றார்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக வெற்றி பெற்ற போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முன்னால் பதவி ஏற்பார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் அவர் தனது சம்பந்தி வாசுதேவ நாணயக்காரவுடன் இணைந்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன்னால் பதவியேற்றார். முதலமைச்சராக பதவியேற்றதில் இருந்து தானே கூட்டமைப்பின் தலைவர் என நினைத்தார். அதனாலேயே கூட்டமைப்பின் தலைமையிடம் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளவில்லை.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி ஒரு பரம்பரைக்கட்சி. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைவராக இருந்தார். அதன் பின் குமார் பொன்னம்பலமும், தொடர்ந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைவராக இருக்கிறார். அந்தக் கட்சியில் சாதாரண பொது மகனுக்குத் தலைமைத்துவம் கிடைக்காது. இதனாலேயே விக்னேஸ்வரன் அவர்களோடு இணையாமல் புதிய கட்சியினைத் தொடங்கினார். கூட்டமைப்பின் தலைமைப் பதவி கிடைக்கவில்லை என்றதும் கட்சியை உடைக்க நினைத்தார். கூட்டமைப்பு உடைந்துள்ளதா, இல்லையா என்பதை மக்கள் இந்தத் தேர்தலில் உணர்த்துவார்கள்.

அரசாங்கத்துக்குத் தமது கட்சியில் இருந்து வடக்கு கிழக்கில் தேசியப்பட்டியல் இன்றி நேரடியாக தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர். தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவுசெய்து தங்களை அங்கீகரித்துள்ளனர் என சர்வதேசத்திற்கு அரசு காட்ட முயல்கின்றது. அதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களை வெற்றிபெற வைக்க ஜனாதிபதி பணத்தை வாரி இறைக்கின்றார்.



கடந்த காலங்களில் இருந்த டக்ளஸ் தேவானந்தாவினுடைய அடாவடிகளை விட தற்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அடாவடி அதிகரித்துள்ளது. சுதந்திரக் கட்சிக்கு விழும் வாக்குகள் கோட்டபாயவிற்கானதாக அமைந்துவிடும். எனவே எமது இளைஞர், யுவதிகள் விழிப்படைய வேண்டும்.

கடந்த காலங்களில் கூட்டமைப்பு பலம்வாய்ந்த அமைப்பாக இருந்ததால்தான் நாம் பலவற்றைச் சாதித்தோம். பல மில்லியன் கணக்கான அபிவிருத்தியை மேற்கோண்டோம். நீண்டகாலமாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் காணிகளை விடுவித்தோம். எமது பணிகளை தொடர எமக்குத் தொடர்ந்தும் ஆணை தாருங்கள் என்றார். (ம –11)

## நீர்கொழும்பு சிறைசாலையின் முன்னாள் அத்தியட்சகர் கைது!

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் நீர்கொழும்பு சிறைச்சாலை அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோ கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் குழுவொன்றின் முன்னிலையில் நேற்று அவர் சரணடைந்த நிலையில், இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு சிறைக் கைதிகளுக்கு சொகுசு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்த சம்பவம் தொடர்பாக முன்னாள் நீர்கொழும்பு சிறைச்சாலை அத்தியட்சகர் அனுருத்த சம்பாயோவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது.

இதனையடுத்து, பணிநீக்கம் செய்யப்பட்ட அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீர்கொழும்பு பதில் நீதவானால் கடந்த 22ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றின் தீர்ப்பை எழுத ஒன்றாக எழுக தமிழர்களே!

## சிறீதரன் நேற்று அறைகூவல்











வரலாற்றின் தீர்ப்பை எழுத ஒன்றாகத் தமிழர்கள் ஒன்றாக எழ வேண்டும் என அறைகூவல் விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர் சிவஞானம் சிறீதரன்.

நேற்றைய தினம் கிளிநொச்சி நகர் பகுதியில் அமைந்துள்ள பசுமைப் பூங்காவில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு அறைகூவல் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடக்கின்ற ஒரு ஜனநாயகப் போர். இதனை எதிர்கொள்ள தன்மானத் தமிழர்கள் அனைவரும் தயாராகுங்கள். தமிழர்களின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் முன்னெடுத்த விடுதலைப் போராட்டத்தை முள்ளிவாய்க்காலில் பல நாடுகள் சேர்ந்து அடித்து மௌனிக்க வைத்தார்கள். அதன் பின்னர் அடுத்து யார் தமிழர்களை வழிநடத்தப் போகிறார்கள், வழிநடத்துகிறார்கள் எனக் கண்டு அவர்களை இலக்கு வைக்கிறது அரசு. தமிழ்த் தேசியத்தை அழிக்க, தமிழர்களின் இருப்பை அழிக்க, தமிழர்களின் தேசிய அடையாளத்தை அழிக்க, தமிழர்களின் ஏக பிரதிநிதிகளான தமிழ்தேசியக் கூட்டமைப்பைச் சிதைக்க வேண்டும் என்று ஒரு திட்டத்தை முன்வைத்தது

தமிழர்களின் வாக்குக்களைச் சிதைக்கப் பல்வேறு கட்சிகளை இன்று களத்திலே இறக்கி, தமிழ்தேசிய இருப்பை அழிக்க சிங்களம் கங்கணம் கட்டி நிற்கிறது. தமிழர்களே விழிப்பாக இருங்கள். தமிழ்ர்கள் தமிழர்களாக இருக்கிறார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்தான் இருக்கிறார்கள் என்ற செய்தியை தேர்தலில் சிங்கள இனவாத அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் காட்டவேண்டும். தமிழர்களை விலைபேச முடியாது எனச் சிங்களத்திற்கும் அவர்களது முகவர்களுக்கும் உரக்கச் சொல்ல, தமிழ்த் தேசிய அடையாளத்தை காக்க, வரலாற்றின் தீர்ப்பை எழுத, ஒன்றாக எழுக தமிழர்களே என அறைகூவல் விடுக்கின்றேன். – என மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை ஆதாரித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் நேற்று மாலை 6 மணியளவில் கிளிநொச்சி நகர் பகுதியில் அமைந்துள்ள பசுமைப் பூங்காவில் குமரகுரு குழுமத் தலைவரும் கட்சியின் முக்கிய செயற்பாட்டளருமாகிய கணபதிப்பிள்ளை ஆனந்தவடிவேல் தலைமையில் இந்தப் பிரசாரம் நடைபெற்றது.

இப்பிரச்சாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான மாவை சேனாதிராஜா, ஆ.சுமந்திரன், கு.சுரேந்திரன், ஆர்னோல்ட் மற்றும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன், பூநகரி பிரதேச சபை தவிசாளர் ஐயம்பிள்ளை, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், கட்சியின் அமைப்பாளர்கள் மக்கள் என ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# வல்வைப் படுகொலையின் நினைவேந்தல் நேற்றிரவு





வல்வெட்டித்துறை,ஓக.03

வல்வைப் படுகொலையின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வல்வெட்டித்துறை தீருவில் வெளியில் வடக்கு மகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நேற்று மாலை 07 மணிக்கு ஈகைச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி, அஞ்சலி செய்யப்பட்டது.

1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலை அடுத்து ஊருக்குள் புகுந்த இந்திய இராணுவமும், அதனுடன் இணைந்து செயற்பட்ட துணை இராணுவக் குழு ஒன்றும் 65 க்கும் மேற்பட்ட பொது மக்களைச் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்திருந்தமையை நினைவு கூரும் வகையிலேயே நேற்றைய நினைவேந்தல் இடம்பெற்றது.

# யாழில் இந்து குருமார்கள் நேற்று அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு





யாழ்ப்பாணம், ஓக.03

வடக்கு வாழ் இந்து குருமார்கள் ஒன்றியத்தினர் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதது.

இந்த நிகழ்வை புத்தசாசன கலாசார மற்றும் மத விவகார அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா ஏற்பாடு செய்திருந்தார்

இதன் போது, இணைப்பாளர் சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இராஜ கிரீடம் அணிவித்து, பொன்னாடை போர்த்தி ,வாழ்த்துமடல் வழங்கியமையுன் 'ஜனாநாயகத்தின் காவலன்' என்னும் பட்டமும் வழங்கி கௌரவித்தார். கடந்த காலங்களில் இந்துமத்ததின் வளர்ச்சிக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய அளப்பெரிய பணிகள் தொடர்பிலும் அவர் எடுத்துக்கூறினார்.

அதன்பின்னர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜெகதீஸ்வர குருக்கள் தலைமையில் இந்துமத சபை ஒன்றுக்கான நிர்வாக கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான ஆலோசனையையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது என அமைச்சரின் செய்திப் பிரிவு தெரிவித்தது.



# நான்கு கைத்துப்பாக்கிகள் வீசப்பட்ட நிலையில் மீட்பு!

## நீர்கொழும்பு சிறைக்காப்பாளரின் வீட்டில் புதைக்கப்பட்ட நிலையில் ரி - 56 தோட்டாக்கள்

புதரொன்றில் வீசப்பட்ட நிலையில் 4 கைத்துப்பாக்கிகள் மற்றும் 8 மெகசின்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர். கொழும்பு குற்றப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, இன்று முற்பகல் 10.30 மணியளவில், கல்கிஸ்ஸை, இதிகஹதெனிய பிரதேசத்தில் வைத்து குறித்த ஆயுதங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள கால்வாயுடன் இணைந்த வகையில் காணப்பட்ட காட்டுப் பகுதியில் வீசப்பட்ட நிலையில் 4 கைத்துப்பாக்கிகள் மற்றும் அதற்கான 8 மெகசின்களை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மீட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலையின் சிறைக் காப்பாளர் ஒருவரின் வீட்டின் பின்புறம் புதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட ரி – 56 வரை துப்பாக்கிகளுக்கான 13 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

---

### கூட்டமைப்பின் வெற்றியை உறுதிப்படுத்த

# முழுத் தமிழினமும் புதனன்று ஒன்றுசேர்ந்து வாக்களியுங்கள்!

## தமிழரசின் தலைவர் மாவை அறைகூவல்



யாழ்ப்பாணம், ஒக. 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாபெரும் வெற்றியை உறுதிப்படுத்த எதிர்வரும் 5ஆம் திகதி ஒட்டுமொத்த தமிழினமும் ஒன்றுசேர்ந்து அணிதிரண்டு வாக்களிக்க வேண்டும்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாக – அசைக்க முடியாத கட்சியாக – பலம் பொருந்திய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளங்குகின்றது.

இந்தநிலையில், நாடாளுமன்றத் தேர்தலை நாம் எதிர்கொண்டுள்ளோம். அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பலத்தை ஒரே குடையின் கீழ் – ஒரே சக்தியாக மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எமது அன்புக்குரிய – பாசத்துக்குரிய தமிழ் வாக்காளர் பெருமக்கள் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை ஆயுதங்களாக்கி இந்தப் பலத்தை சர்வதேசத்துக்கு மீண்டும் ஒரு தடவை எடுத்துக்காட்ட வேண்டும். அந்தப் பலம் கடந்த காலங்களைவிட அதிசக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமையன்று வடக்கு, கிழக்கிலுள்ள ஒவ்வொரு தமிழ் வாக்காளரும் இந்தக் கடமையைத் தவறாது செய்ய வேண்டும். அதனூடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிச் செய்தி உலகெங்கும் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

அந்த மாபெரும் வெற்றிச் செய்தியைக் கேட்டு தமிழர்களை மிதித்து ஆள முயலும் சிங்களப் பேரினவாதம் கதிகலங்க வேண்டும். மாற்று அணிகள் ஓடி ஒழிய வேண்டும்.

அந்தச் சரித்திர வெற்றி – தமிழர்கள் ஓரணியில் பெரும் பலத்துடன் நிற்கும் செய்தி சர்வதேச சமூகத்தை விழிப்படையச் செய்ய வேண்டும்; தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற இலங்கை அரசு மீதான சர்வதேச அழுத்தத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். அதன்பிரகாரம் இலங்கை அரசின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். தீர்வுக்கான பேச்சுக்கள் ஆரம்பமாக வேண்டும். நியாயமான – நிரந்தமான தீர்வைத் தமிழர்கள் பெறவேண்டும் – என்றார்.

---

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## மூன்றே மூன்று வாக்காளர்களுக்காக தனியாக ஒரு வாக்கெடுப்பு நிலையம்







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றே மூன்று வாக்காளர்களுக்காக ஒரு வாக்கெடுப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை மட்டக்களப்பு வாவியின் நடுவே மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு மேற்காக அமைந்துள்ள தீவில் உள்ளது . இது பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டதொழுநோய் வைத்திய சாலையாகும்.

தொழுநோய் வைத்தியசாலையில் சுமார் 200 பேர் வரை தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய வசதிகளை கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது. அங்கு வேலைசெய்யும் ஊழியர்கள் தங்கியிருக்கும் விடுதிகள், வணக்க தலங்கள் எனப் பல வசதிகளும் இருந்துள்ளன.

மாந்தீவில் 2009 ஆம் ஆண்டு பாரிய தீ அனர்த்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது அப்போது 13 நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளனர். அங்கு தீ அனர்த்தத்தின் பின்னர் வைத்தியசாலை சரியான பராமரிப்பு இன்றி மூன்று பேர் தவிர அனைவரும் சென்றுவிட்டனர். அதில் தற்போதுள்ளவர்களின் வாக்குகள் மட்டக்களப்பு தேர்தல் தொகுயில் பதியப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படுகின்றது.

இவர்களுக்கான வாக்குப் பெட்டி இயந்திரப் படகு மூலம் மாந்தீவு வாக்கெடுப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி திருமதி கலாமதி பத்மராஜா தெரிவிதார்.

மூன்று வாக்காளர்களுக்கும் பொதுவான நியமங்களே கடைப்பிடிக்கப்படவுள்ளன எனவும் வழமையான வாக்களிப்பு நேரமாகிய 7.00 மணிக்கு முதல் 5.00 மணிவரை வாக்களிக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# முற்கூட்டியே ஓய்வு பெறுகிறார் தேர்தல் ஆணைக்குழு தலைவர்



கொழும்பு, ஒக.03

பதவி காலம் முடிவடைவதற்கு முன்னரே தேசிய தேர்தல் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஓய்வுபெறப் போகிறார் என அறிவித்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இவரின் பதவிக்காலம் இவ்வருடம் நவம்பர் 12 ஆம் திகதியே முடிவடைகின்றது. எனினும் செப்டெம்பர் மாதமே அவர் பதவியில் இருந்து விலகுவார் என அறிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவியில் இருந்து விலகுவதற்கு மஹிந்த தேசப்பிரிய தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் 37 வருடங்கள் தேர்தல் பணிகளில் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர். அவ்வாறாயின் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலே மஹிந்த தேசபிரியவின் இறுதி தேர்தல் பணியாகக் கூட அமையலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# மஹிந்தவின் கோட்டையில் பெண்ணொருவர் கொலை

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி

*கொழும்பு, ஒக. 02*

*துப்பாக்கிச் சூட்டில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*அம்பாந்தோட்டை மாவட்டம், பெலியத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்முல்ல பிரதேசத்தில் இன்று காலை 9.55 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*தம்முல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு முன்பாக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயங்களுடன் காணப்பட்ட குறித்த பெண், தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சலுகைகளுக்கு அடிபணியாத, ஊழல் அற்ற, கொள்கை பற்றுறுதி கொண்ட ஒரு அரசியல் தலைமைத்துவமே இன்று அவசியம் என்றும், அத்தகைய ஒரு தலைமைத்துவத்தை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஊடாகச் செய்திருப் பதாகவும் தெரிவித்திருக்கும் கூட்டணியின் தலைவரும் வடமாகாணமுன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் விக்னேஸ்வரன் இதற்கான அதிகாரத்தையும் ஆணையையும், ஆதரவையும் இந்ததேர்தலின் ஊடாக வழங்கித் தமது அரசியலின் பங்காளிகளாக இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் நேற்று ஞாயிறுக்கிழமை மாலை நடைபெற்ற இறுதிதேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்த நீதியரசர் வடக்கு – கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் தனது தலைமையிலான கூட்டணியை அமோக வெற்றியடைசெய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்முறை தேர்தல் தமிழர் அரசியலை பொறுத்தவரையில் ஆரோக்கியமான ஒரு நிலைமையினை ஏற்படுத்தி இருப்பதாகவும் இரண்டு வகைகளில் முக்கியத்துவம் மிக்கதாகவும் தனதுரையில் குறிப்பிட்டுள்ள விக்னேஸ்வரன் அது பற்றி விளக்கம் அளித்துள்ளார்.



# தமிழர் அரசியலை பலப்படுத்துவதற்கு பங்காளிகள் ஆகுமாறு விக்கி அழைப்பு

## நேற்று இறுதிப் பரப்புரை கூட்டத்தில் விடுத்தார்

வாக்களிப்புக்கு இன்னமும் 3 நாள்கள் மட்டுமே இருக்கின்றன. பிரசாரங்கள் இன்றுடன் முடிவுக்கு வருகின்றன. எமது இறுதி பிரசார கூட்டத்தில் நான் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கின்றேன். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் இம்முறை தேர்தல் இரண்டு வகைகளில் முக்கியத்துவம் மிக்கதாக அமைகின்றது. முதலாவதாக, வரலாற்றுப் பட்டறிவுகளின் அடிப்படையிலும் சமகால உலக நடைமுறைகளின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் தமக்கான இறுதித் தீர்வு தொடர்பில் தீர்க்கமான ஒரு செய்தியினை வெளிப்படுத்தும் தேர்தலாக இம்முறை தேர்தல் அமைகின்றது. சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தித் தாம் விரும்பும் தீர்வை ஏற்படுத்த ஆவன செய்யுமாறு சர்வதேச சமூகத்துக்கு ஒரு தீர்க்கமான ஒரு செய்தியினை சொல்லுவதற்கு எமது மக்கள் தயாராகிவருகிறார்கள். இலங்கையின் இன முரண்பாட்டு வட்டத்தில் இது ஒரு முக்கிய பரிமாணமாக மிளிர்ந்துள்ளது. எமது மக்களின் இந்தச் செய்தி எமதுபிரச்சினை தொடர்பில் எதிர்வரும் காலத்தில் இந்தியா ஐ. நா மற்றும் சர்வதேச சமூகத்தின் நகர்வுகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது எமது நம்பிக்கை.

இரண்டாவதாக, தமிழ் அரசியல் செயற்பாடுகளில் ஓர் ஆரோக்கியமான பரிமாணத்தை ஏற்படுத்தும் தேர்தலாகவும் இம்முறை தேர்தல் அமைந்துள்ளது. கடந்த காலங்களைபோல அல்லாமல் வெறுமனே ஒற்றுமை என்ற கோத்தின் அடிப்படையில் எமது மக்களைத் திருட்டுத்தனமாக (தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு) வாக்களிக்க செய்த நிலைமையில் இருந்துஅரசியல் கருத்துவினைப்பாட்டு செயன்முறையின் ஊடாகத் தமது பிரதிநிதிகளை மக்கள் தெரிவுசெய்வதற்கு இம்முறைதேர்தல் வழிவகுத்திருக்கிறது. கட்சிகளின் கொள்கைகள், கோட்பாடுகள் அணுகுமுறைகள், பட்டறிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னெப்போதும் இல்லாத அறிவு ரீதியான, அனுபவ ரீதியான கலந்துரையாடல் அல்லது கருத்து வினைப்பாட்டை உருவாக்கி அதன் அடிப்படையில் நன்மை, தீமைகளை நன்கு ஆராய்ந்து, எமது மக்கள் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு இம்முறை தேர்தல் வழிவகுத்துள்ளது. கடந்த இரண்டுமாத காலங்களில் பல்வேறு கட்சிகளினதும் பரப்புரைகள் இதேர்தல் விஞ்ஞாபனங்கள் ஆகிய வற்றின் அடிப்படையில்பல்வேறுதகவல்கள்,கருத்துக்கள் உங்கள் சிந்தனையை தட்டிவிட்டிருக்கும். அவற்றை பகுத்தறிந்து உங்களுக்குச் சரி என்று படும் ஒரு தீர்மானத்துக்கு நீங்கள் இப்பொழுது வந்திருப்பீர்கள். எமது நோக்கம் என்ன, அதனை அடைவதற்கான வழி வரைபடம் என்ன, தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு நீங்கள் ஏன் வாக்களிக்க கூடாது, அதனால் ஏற்படப்போகும் பாதிப்பு என்ன, தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கு நீங்கள் ஏன் வாக்களிக்க வேண்டும், அதனால் ஏற்படப்போகும் நன்மை என்ன ஆகிய தகவல்களை, கருத்துக்களை எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் எனது பிரசார உரைகளிலும் அறிக்கைகளிலும் ஊடக நேர்காணல்களிலிலும் நாம் உங்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்தி இருக்கின்றோம். இவை தவிர எமது அரசியலை நேர்வழிப்படுத்தும், செம்மைப்படுத்தும் சில நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சலுகைகளுக்கு அடிபணியாத, ஊழல் அற்ற, கொள்கை பற்றுறுதி கொண்ட ஓர் அரசியல் தலைமைத்துவம் மிக அவசியம். இதுவரை காலமும் நாம் இவற்றில் கவனம் செலுத்தவில்லை என்ற போதிலும் இனிமேலாவது இத்தகைய வழிகளில் எமது அரசியலை செப்பனிடுவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள். வேண்டும். தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இதற்கான சில முன்னுதாரணங்களை செய்துள்ளது. தேர்தலில் வெற்றிபெறும் எமது வேட்பாளர்கள் தமது சொத்து விவரங்களை பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தவேண்டும் என்பது ஒரு நிபந்தனை.

இது அரசியலை ஒரு வருமானம் ஈட்டும் கருவியாக பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்பதற்காக நாம் மேற்கொண்டுள்ள ஒரு முன்னற்பாட்டு நடவடிக்கை. நான் ஏற்கனவே எனது சொத்து விவரங்களைப் பகிரங்கப்படுத்திவிட்டேன். அதேபோல நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படும் எல்லா வேட்பாளர்களும் தமது மாதந்தபடியில் குறிப்பிட்டளவை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதும் எமது புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமக்குத்தான் எல்லாம் தெரியும் நாம் நினைத்தது தான் சரி என்று தன்னிச்சையாக செயற்படாமல் எமது புத்திஜீவிகள், செயற்பாட்டாள்களை உள்வாங்கி நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒரு செயற்பாட்டை முன்னெடுத்து, ஆராய்ந்து அறிவு ரீதியாகவே எமது மக்கள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இவற்றைப்பற்றி உங்களுக்கு நாம் தெளிவாக எடுத்துக்கூறி இருக்கிறோம். இவற்றை முன்னெடுத்து செல்வதற்கான அதிகாரத்தையும், ஆணையையும்,ஆதரவையும் இந்ததேர்தலின் ஊடாக எமக்கு நீங்கள் வழங்கி எமது செயற்பாடுகளின் பங்காளிகளாக நீங்கள் இருக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பதில் வேண்டுகோள் விடுக்கின்றேன். வடக்கு கிழக்கில் எமக்கு ஒரு அமோக வெற்றியை நீங்கள் பெற்றுத்தரவேண்டும். இந்த வெற்றி எமது நீண்டகால அரசியல் போராட்டத்திலும், உங்கள் வாழ்க்கையிலும் நல்லதோர் மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.

என தருமை மக்களே, எந்த ஒரு வாக்கையும் பயன்படுத்தாமல் வீணடித்துவிடாதீர்கள். பயன்படுத்தப்படாத உங்கள் வாக்குகள் உங்கள் வாழ்க்கைக்கு எதிராக தொழிற்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். புலம்பெயர் தமிழ் மக்களே,வடக்கு – கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களே, உங்கள் உறவுகளைத் தொடர்பு கொண்டு எதிர்வரும் 5ஆம் திகதி மறவாமல் வாக்களிக்கச் செல்லுமாறு கோருங்கள்.

எனது வாழ் நாளின் பெரும்பகுதியில் நீதிமன்றங்களின் ஊடாக நூற்றுக்கணக்கான தீர்ப்புக்களை வழங்கிய நான் இன்று மக்கள் நீதிமன்றத்தின் முன்பாக ஒரு தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கின்றேன். நீங்கள் வழங்கும் இந்ததீர்ப்பு ஒருநல்ல மாற்றத்துக்கான திறவுகோலாக இருக்கும் என்பதிலும் முழு உலகத்தையும் உங்களை நோக்கி திரும்பவைக்கும் என்பதிலும் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது. என்றார்.

> **வரலாற்றுப் பட்டறிவுகளின் அடிப்படையிலும் சமகால உலக நடைமுறைகளின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் தமக்கான இறுதித் தீர்வு தொடர்பில் தீர்க்கமான ஒரு செய்தியினை வெளிப்படுத்தும் தேர்தலாக இம்முறை தேர்தல் அமைகின்றது. சர்வதேச ரீதியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தித் தாம் விரும்பும் தீர்வை ஏற்படுத்த ஆவன செய்யுமாறு சர்வதேச சமூகத்துக்கு ஒரு தீர்க்கமான ஒரு செய்தியினை சொல்லுவதற்கு எமது மக்கள் தயாராகி வருகிறார்கள்.**

காலைக்கதிர் Kalaikkathir

## வீட்டுச் சின்னத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் தங்கள் கைகளாலேயே தங்கள் கண்ணைக் குத்திக் கொள்ளப் போகின்றனரா? இல்லை தாயகத்தைக் காக்கப் போகின்றனரா?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளருமான ஈ.சரவணபவன்.

யாழ்.ஊடக மையத்தில் நேற்று மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ராஜபக்ஷக்கள் பௌத்த – சிங்களப் பேரினவாதத் தீயை தெற்கில் மூட்டியிருக்கின்றனர். அந்தத் தீயில் தமிழ் மக்களும் எரிந்து பொசுங்கப் போகின்றார்களா? இல்லை அதை எதிர்த்துப் போராடப் போகின்றார்களா? தமிழ் மக்கள் எதிர்வரும் புதன்கிழமை நடக்கின்ற போரில் தங்கள் வாக்கு ஆயுதத்தால் எதிரியைச் சரிக்க வேண்டும்.

தமிழர் தாயகத்தில் தனிப் பெரும் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கூட்டமைப்புக்கு போடப்படாத ஒவ்வொரு புள்ளடியுமே, ராஜபக்ஷக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்களே போடும் புள்ளடிகளாக மாறும்.

மாற்றம், மாற்றுத் தலைமை, மாற்று அணி என்ற கோசங்களோடு பலர் தேர்தல் களத்தில் இருக்கின்றார்கள். மக்களே இறுதித் தருணம் இது. பொறுமையாக நடந்தவற்றை எண்ணிச் சிந்தித்துப் பாருங்கள். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போதும் மாற்றுத் தலைமை, மாற்று அணி என்ற கோசங்கள் ஒலித்தன. அந்தப் போலிக் கோசங்களின் பின்னாலும் சில மக்கள் இழுபட்டுச் சென்றார்கள். அதன் விளைவு என்ன?

மாற்று அணியினர் என்று சொல்லிக் களமிறங்கியவர்கள் தாங்களும் ஆசனத்தைக் கைப்பற்றவில்லை. மாறாக கூட்டமைப்புக்கு கிடைக்க வேண்டிய ஆசனத்தை சிங்களப் பேரினவாதக் கட்சிக்கு தாரை வார்த்தனர். உண்மையில் மாற்றம் என்ற போர்வையில் உள்ளவர்களின் திட்டம் அதுதான். தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்து, சிங்களப் பேரினவாதக் கட்சிகள் எங்கள் தாயக மண்ணில் காலுன்ற வைப்பதையே அவர்கள் மாற்றம் என்று நினைக்கிறார்கள்.

இந்தத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிகளவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும். ஆனால், எங்கள் நாட்டின் விகிதாசார தேர்தல் முறைமை காரணமாக, இந்த மாற்றம் என்று சொல்லிக் கொள்வோர் கூட்ட மைப்பிடமிருந்து பிரித்தெடுக்கும் ஒரு சில ஆயிரம் வாக்குகள் காரணமாக, கோட்டாபயவின் ஏவலாளிகளான டக்ளஸ், அங்கஜன், சந்திரகுமார் போன்றோர், தமிழ் மக்களின் வாக்குகளாலேயே வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை உருவாக்கினால், அது கோட்டாபய அரசு வெற்றி பெறுவதற்குச் சமமானது. எந்தக் கோட்டாபயவுக்கு எதிராக 10 மாதங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வாக்களித்தார்களோ, அதே கோட்டாபய மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு இடமளிக்கப் போகின்றீர்களா?

அவ்வாறு கோட்டாபய மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டால் என்ன நடக்குமென்பது அனைவருக்கும் நன்கு தெரியும். இந்த நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்குச் செல்லும். ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சி மீண்டும் மலரும். வெள்ளை வான் கடத்தல் நடக்கும். மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கொல்லப்படுவார்கள் அல்லது கடத்தப்படுவார்கள். ஊடகங்கள் முடக்கப்பட்டு, கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளை நசுக்கப்படும்.

ஒட்டுமொத்த நாடும் இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படும். இந்த நாட்டில் தமிழர்கள் வாழ முடியாத நிலைமைதான் தோன்றும். இவையெல்லாம் கடந்த காலப் பட்டறிவுகள்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று 13ஆவது திருத்தம், 19ஆவது திருத்தம் என்பவற்றை இல்லாதொழிக்கப் போவதாக ராஜபக்ஷக்கள் இப்போதே சொல்லியிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நாட்டில் இருக்கின்ற அதிகாரப் பரவலாக்கலும் இல்லாமலாக்கப்பட நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்களா?

ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து நின்ற ஒரே தமிழ்க் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். அந்தத் தேர்தலில் கோட்டாபயவுக்கு எதிராக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் 3 இலட்சத்து 20 ஆயிரம் வாக்குகள் போடப்பட்டன. அதே உத்வேகத்துடன் கோட்டாவுக்கு எதிராக வாக்களித்த 3 இலட்சத்து 20 ஆயிரம் பேரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் 7 ஆசனங்களையும் நாம் கைப்பற்ற முடியும். அதன் மூலம் தமிழர்கள் அனைவரும் இனப்படுகொலையாளியான கோட்டாபயவை எதிர்க்கிறோம் என்ற செய்தியை சர்வதேசத்துக்கும் உரக்கச் சொல்லமுடியும். ஆகவே, கோட்டாபயவின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு இங்கிருந்து ஒரு வாக்கும் போடப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வீட்டுச் சின்னத்தில் வாக்களிக்க தமிழ் மக்கள் திடசங்கற்பம் கொள்ள வேண்டும் – என்றார்.

## காமுகனான...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக கோட்டாபாய ராஜபக்ஷ ஜனாபதிபதி ஆன உடனேயே அவர் தன்னுடைய வெளியுறுவுத்துறை அமைச்சரை அனுப்புகிறார். ஜனாதிபதியை டில்லிக்கு கூப்பிகிறார். அங்கே அவருக்குச் சொன்னதை வெளியே வந்தும் இதைத் தான் ஜனாதிபதிக்கும் சொல்லியிருப்பதாக கூறினார். அதாவது இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தன்மானத்தோடும் சுயாதீனத்தோடும் சமத்துவத்தோடு அதிகாரப் பகிர்வோடும் வாழ வேண்டுமென்று அவரிடத்திலே சொல்லியிருப்பதாக கூறியிருந்தார்.

அந்தளவுக்கு எங்களுடைய நிலைப்பாடு இந்தியப் பிரதமரோடு இருக்கின்ற அதேவேளையில் இங்கே முதலமைச்சராக நாங்கள் கொண்டு வந்து இருத்தியவர் ஒரு வேண்டுதல் கடிதமொன்றைக் கொடுக்கிறார். அது குறித்து பிறகு தான் எங்ளுக்குத் தெரிய வருகிறது. அந்தக் கடிதத்திலே அவர் கேட்டுக் கொண்டது என்னவென்றால் எமது மக்களுக்கு இத்தனை பிரச்னைகள் இருக்கத்தக்கதாக – காமுகன் பிரேமானந்தாவின் சீடர்கள் சிலர் இப்போதும் இந்தி சிறையில் இருப்பதாகவும் அவர்களை விடுவிக்க கோரி கடிதம் கொடுத்திருக்கின்றார்.

இன்றைக்கு தான் 1 இலட்சத்து 37 ஆயிரம் வாக்குகள் பெற்றேன் என்று பிதற்றிக் கொண்டு திரிகிறார். நாங்கள் கேட்டதற்கிணங்க அவர் மீது நம்பிக்கை வைத்து மக்கள் வாக்களித்தனர். இந்தியாவிறகு கொண்டு செல்லப்பட்ட 13 இளம் பெண்கள், வயது குறைந்த பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி அதன் காரணமாகச் சிறையிலே அடைக்கப்பட்ட அவருடைய பிரோமானந்தம் சாமியாரும் இருந்தார். மூன்று நீதிமன்றங்கள் இந்தியாவில் உள்ளன. அடுத்தடுத்து மூன்று நீதிமன்றங்கள் அவர்களைக் குற்றவாளிகாக அடையாளயம் கண்டு அறிவித்தன.

அவருக்கு இரண்டு வருட ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டது. இப்படியாக வன்முறை செய்தவர்களை விடுவிக்க வேண்டுமென்பது வடக்கு மாகாண பிரேமானந்தாவின் சீடருக்கு முக்கியமாகப்பட்டது. இதைப் பற்றி பல தடவைகள் அவரிடத்தே சபையின் அவைத் தலைவர் இங்கே மேடையில் இருக்கிறபொழுது இதைப்பற்றியும் சொல்லுகிறேன். சில நாட்களுக்கு முன்னர் நானும் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்று கூறினேன். அவர் அதற்குப் பதிலில்லை. அவ்வாறு பதில் சொல்ல அவரால் முடியாது. ஏனென்றால் அவர் கொடுத்த கடிதத்தின் பிரதி எங்களிடத்தே இருக்கின்றன. இப்படியாக சொல்லும் ஒருவருக்கு தமிழ் மக்களே வாக்குக் போட விரும்புகிறீர்களா?

ஆக அவர் நெற்றியில் பட்டையை பூசிவிட்டு மாறு வேடத்தில் சென்று வந்தாலும் அவருக்கு எவரும் வாக்களிக்கக் கூடாது. ஆகவே எங்களுடைய வாக்குகளைச் சிதறடிப்பதற்காகவே உருவாக்கப்பட்ட ஒரு கட்சி தான் அந்தக் கட்சி. மேலும் இங்குள்ள இன்னுமொரு கட்சி தேர்தலின் போட்டியிடுவதும் பகிஷ்கரிப்பதாக அறிவிப்பதாகவே இருக்கிறது. ஆக அந்த பழைய சைக்கிளை நம்பிப் பயனில்லை. அது வரும் வராமலும் போகும். அவர்கள் பகிஷ்கரிக்கச் சொல்லுவார்கள். தேர்தல் போட்டி என்று சொல்லுவார்கள். திரும்பவும் பகிஷ்கரிப்பு என்று சொல்லுவார்கள். அதனை வேறு விதமாகச் சொல்லுவார்கள். அவர்கள் திரும்பவும் தேர்தல்களில் போட்டியிடுவார்கள். அதனால் அவர்களை ஒரு பக்கத்தில் பேசாமல் விட்டு விடுங்கள். அவர்களுக்கு வாக்க ளிக்கப் போவதால் ஏதுவும் நடந்து விடப் போவதில்லை.

இந்த இருவரையும் தவிர்த்து விட்டு மற்றப் பக்கத்தில் அரசின் முகவர்களாக அவர்கள் மாறு வேடத்தில் வருகின்றார்கள். அங்கஜன் இராமநாதன் வேலை வாய்ப்பு தருவதாக விண்ணப்படிவங்களை நிரப்பி எமது இளைஞர்களை குழப்பியடித்துக் கொண்டிருக்கிறார்.

இது தேர்தல் சட்டமீறல். தற்செயலாக தெரிவு செய்யப்படாலும் கூட அவருக்கு எதிராக நாங்கள் வழக்குத் தாக்கல் செய்து அவருக்குப் பதவி இல்லாமல் பண்ணுவோம்.

டக்ளஸ் தேவானந்தாவை பொறுத்தவரை பல ஆண்டு காலமாக அவர் அதைக் கொடுத்தார், இதைக் கொடுத்தார் என்று சொல்கின்ற சிலர் இருந்தாலும் அவற்றுக்கான காலம் முடிவடைந்துவிட்டது. அதற்கான விலையை கொடுத்து முடிந்தாயிற்று. இனிமேலும் அதற்காக ஆதரவை வழங்க வேண்டுமென்றில்லை.

கிழக்குக்குச் சென்று பிரசாரம் செய்தபோது பிள்ளையான், கருணா பற்றியும் நான் சொல்லியிருந்தேன். ஏனென்றால் இன்றைக்கு ஒரு முக்கியமான தருணத்தில் நாங்கள் நின்று கொண்டிருக்கிறோம். நாங்கள் விரும்பத்தகாத ஆட்சியொன்று ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. எங்களுடைய வாக்குகளினால் அதனை நாங்கள் தடுக்க முடியாமல் போய்விட்டது. ஏனென்றால் இலங்கை முழுவதும் ஒரு தொகுதியாக நடந்த தேர்தல் அது. அப்படியான தேர்தலில் நாங்கள் எல்லாரும் ஒன்றாக இணைந்து ஒருநாளும் இல்லாத அளவுக்கு ஒருவருக்கு எதிராக வாக்களித்தும் அதனைத் தடுக்க முடியாமல் போய்விட்டது.

அதற்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தலிலே எங்களுடைய வாக்கின் மூலமாக நாங்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்தத் தடவை அதனைச் செய்ய முடியவில்லை. அப்படியாக தனிச் சிங்கள பௌத்த வாக்குகளினாலே ஆட்சி பீடம் ஏறியவர்கள் எண்ணிக்கையில் அவர்கள் பெரும்பான்மையினராக – அறுதிப் பெரும்பான்மையினராக – அசைக்க முடியாத பெரும்பான்மையினராக நாட்டில் இருக்கின்ற காரணத்தினால் – அவர்கள் ஆட்சி பீடம் ஏறிய காரணத்தால் இனிமேல் எவருக்கும் எதுவும் கொடுக்க முடியாது. தமிழ் மக்கள் கேட்பதை நான் கொடுக்கமாட்டேன். நாங்கள் கொடுக்க நினைப்பதைத் தான் நான் கொடுப்பேன் என்று மஹிந்த சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஏனென்றால் அந்தத் தேர்தலிலே அவர்கள் பெற்ற வெற்றி. ஆனால் அது ஒரு தொகுதிக்கான தேர்தல். இப்பொழுது வந்திருப்பது அப்படியல்ல. 225 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்கிற தேர்தல். இந்ததத் தேர்தலில் தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கானவர்களாக மட்டும்தான் இருக்க வேண்டுமே தவிர அந்த ஆட்சியாளர்களின் முகவர்கள் எவராவது தமிழ் மக்களினாலே தெரிவு செய்யப்படக்கூடாது .

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வருகின்ற இந்தத் தேர்தல்தான் எங்களுக்கு வந்திருக்கிற ஒரே ஒரு சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடக் கூடாது. இந்தச் சந்தர்ப்பத்திலே நாங்கள் வேறு விதமாகச் சிந்திக்கக் கூடாது. எங்களுடைய வாக்குகள் சிதறடிக்கிற வண்ணமாக – எங்களுடைய பலம் இல்லாமல் போகின்ற வண்ணமாக நாங்கள் மாற்று அணிகளுக்கு என்றும் அந்தக் கட்சிக்கு இந்தக்கட்சிக்கு என்றும் வாக்களித்துக் கொண்டிருந்தால் எங்களை நாங்களே பலவினமாக்கும் பாரிய குற்றச் செயலை நாங்கள் புரிவோம்.

இதை நாங்கள் சரியாகப் புரிந்து கொண்டு எங்களை பலப்படுத்துகின்றமைதான் செய்ய வேண்டிய ஒரே ஒரு செயல் தான்.

அப்படி நான் சொல்வதற்கு ஒரே காரணம் இன்றைக்கு வடக்கிலும் – கிழக்கிலும் இருந்து ஒரு அணியாக பாராளுமன்றத்திற்குச் செல்லக்கூடியது கூட்டமைப்பு மட்டும் தான். வேறு ஏதாவது ஒரு கட்சி ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களையாவது அனுப்புவதற்கு இருக்கிறன்றதா அவ்வாறு அனுப்பவும் முடியாது.

ஏனெனில் ஒரு ஆசனத்துக்காக கெஞ்சி மன்றாடி உலகமெல்லாம் ஓடித் திரிகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசனம் கொடுத்தால் தமிழ் மக்களுடைய பலத்திற்கு என்னாவது ஆகவே மக்கள் சிந்தித்து ஒரே நிலையில் இருந்து ஒரு நிலைப்பாட்டை உறுதிசெய்பவர்களாக எங்களது அரசியல் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லாமல் அது எங்களுடைய இறைமையில் இருந்து எழுகிறது அது எங்களுடைய சுயநிர்ணய உரிமை அதை நாங்கள் எதற்கும் விற்றுப் போகமாட்டோம் என்று சொல்லி எங்களுக்கு வாக்களிக்கச் செய்யுங் கள் – என்றார்.

## இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டுப் பூங்காவில் இடம்பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இரணை மடு தொடர்பில் இப்போது யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டியங்கும் தொலைக்காட்சி ஒன்று பெயரைக் குறிப்பிடாமல் எனக்கு எதிராக ‘இரணைமடு நீரை தர மறுத்தவர் யார்? மறக்க மாட்டார்கள் யாழ்ப்பாண மக்கள்’ – என்று கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம் ஒன்றைப் பிரசுரித்து வருகின்றது.

இதன் விளக்கம் இல்லாமல் குறுகிய வட்டத்துக்குள் அவர்கள் நிற்கிறார்கள் இரண்டு மடுக்களை இணைத்து இரணை மடுவாக ஆங்கிலேயர்கள் ஒரு குளத்தைக் கட்டினார்கள். குளம் உருவாக்கப்பட்ட பிற்பாடு அந்தக் குளத்தை சூழ மக்கள் அந் தத் தண்ணீரை நம்பி குடியேறினார்கள். இப்போது 42 ஆயிரம் ஏக்கர் வயல்கள் அக்குளத்துக்குஜ் கீழ் விவசாயம் செய்யக்கூடிய நிலம் உள்ளது 42 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்தில் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலத்திற்கு மட்டுமே நீர் பாச்சக் கூடிய வாய்க்கல்கள் உண்டு. மிகுதி 22 ஆயிரம் ஏக்கர்களும் மானவாரி நிலங்கள். வாய்க்கால்கள் உள்ள 20 ஆயிரம் ஏக்கர் வயல்களில் ஆக கூட 15 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே சிறு போகம் செய்யக் கூடியதாக உள்ளது. இது புனரமைப்பு செய்வதற்கு முதல் 7,000 அல்லது 8,000 ஏக்கர்களாக இருந்தது. அதிலும் கடந்த வருடம் 15 ஆயிரம் ஏக்கர் விதைத்து, இறுதி நேரம் தண்ணீர் இல்லாமல் குளத்தில் பக்கோ போட்டு வெட்டித்தான் தண்ணீர் எடுத்தார்கள். குடிக்கவும் தண்ணீர் வைத்திருக்கவில்லை குளத்தில் கடைசி 10 அடி தண்ணீர் வைத்திருக்க வேண்டும் என்கின்ற விதி உண்டு. காரணம் மாடுகள், உயிரினங்கள் குடிப்பதற்காக. அதனையும் தாண்டி கடந்த முறை தண்ணீரை வெட்டி எடுத்தார்கள்.

இம்முறை சித்திரையில் சிறு மாரி பொழிந்தபடியால் இப் பிரச்சினை தோன்றவில்லை. அதனால் குளத்தில் சிறியளவு தண்ணீர் உள்ளது. மற்றைய உயிரினங்களுக்காக. ஆனால் கிளிநொச்சியைச் சார்ந்த யாருமே குடிக்க தண்ணீர் தர மாட்டோம் என்று சொன்னது கிடையாது. அங்கு உள்ள விவசாயிகள் கேட்பது வயல் நிலங்களுக்கான உற்பத்தி பிரச்சினைகளை முதலிலே தீருங்கள். அதற்கு ஏதாவது ஒரு முடிவை சொல்லுங்கள். 42 ஆயிரம் ஏக்கரில் 20 ஆயிரம் ஏக்கருக்குதான் தண்ணீர் பாச்சக் கூடியது. அதிலும் 15 ஆயிரம் ஏக்கர் தான் சிறு போகம் செய்யலாம். இவ்வாறு நிலமை உள்ளது. அதற்கு ஒரு மாற்றத்தை செய்து தாருங்கள் என்று கேட்டால் அதற்கு விடை இல்லை.

உங்களில் எத்தனை பேருக்கு தெரியும் கிளிநொச்சியில் உள்ள பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் குடிப்பதற்கு தண்ணீர், இல்லை மாரிகாலத்திலும் கோடை காலத்திலும் இப்போதும் நீர்த்தாங்கிகளிலையே நீர் விநியோகிக்கப்படுகிறது. அங்கு கூட இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் விநியோகிக்கப்படுவதில்லை. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லாறு போன்ற பகுதிகளில் குடிக்க தண்ணீர் இல்லை

கிளிநொச்சியில் தண்ணீர் இல்லை. குடிக்க, விவசாயம் செய்ய தண்ணீர் இல்லாத நிலையில் யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டால் இங்கே ஒரு விரோதம் வளரும். இதனை அரசியலாக சிலர் காவிச் செல்கின்றார்கள். என்றார்.

























## வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி

# காலைக்கதிர் நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

**போட்டி விதிகள்**

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. இன்று 03.08.2020 முதல் எதிர்வரும் 13.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை எழுதி, இத்துடன் உள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார்.
4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 20.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**கேள்விகள்:**

1. தாண்டக வேந்தர் என சேக்கிழாரால் புகழாரம் சூட்டப்பட்டவர் யார்?
2. சைவ சமயக் குரவர் எத்தனை பேர்? அவர்கள் யாவர்?
3. ஆலயங்களில் துவஜாரோகணம் என அழைக்கப்படும் திருவிழா எது?
4. இறைவனின் ஐந்தொழில்கள் எவை?
5. முருகப் பெருமானின் அறுபடை வீடுகள் யாவை?
6. ஈழத்தின் புகழ்பூத்த முருகன் ஆலயங்கள் நான்கு தருக
7. இவற்றில் அலங்காரக் கந்தன் என அழைக்கப்படும் ஆலயம் எது?
8.நல்லூர் கந்தசுவாமி கோவில் தர்மகர்தாக்கள் பரம்பரைப் பெயர் என்ன?
9. நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வரலாற்றைச் சொல்லும் நூல் ஒன்று தருக?
10. நல்லூர் ஆலயத்தில் அமைந்துள்ள குபேர வாயிற் கோபுரம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்ற ஆண்டு?
12. நல்லூர்க் கந்தன் மீது பாடப்பட்ட திருவூஞ்சலைப் பாடியவர் யார்?
13. திருவூஞ்சல் படிக்கப்படும் சந்தர்ப்ங்கள் இரண்டு தருக?
14. நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்துக்கான கொடிச் சீலையை வழங்கும் மரபினர் யார்?
15. நல்லூரில் அமர்ந்துள்ள ஆறுமுகப்பெருமான் எழுந்தருளியாக வீதியுலாவரும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 17.08.2020 க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்**

**பங்குபற்றுபவர்களின் விபரங்கள்:-**

**1. முழுப் பெயர் :..........................................................................**

**2. பிறந்த திகதி :..........................................................................**

**3. கல்வி கற்கும் தரம் :...................................................................**

**4. பாடசாலை :..........................................................................**

**..........................................**
**கையொப்பம்**






# நல்லூர் கந்தசுவாமி

## திருமஞ்சச் சிறப்பிதழ்





வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பத்தாம் நாள் – மஞ்சத் திருவிழா இன்றாகும். ஆடி அமாவாசையை அடுத்து வரும் ஆறாம் நாள் – சஷ்டி அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவம் இருபத்தைத்து நாள்களும் பக்தி பூர்வமாக இடம்பெறுவது வழமையாகும்.

மகோற்சவ காலத்திலுள்ள விசேட திருவிழாக்களின் வரிசையில், மஞ்சத்திருவிழாவும் ஒன'றாகும். திருவிழாவின் பத்தாம் நாள் மஞ்சத் திருவிழா நாளில் அழகானமஞ்சத்தில் முருகப் பெருமான் முத்துக்குமாரராக வள்ளி – தேவயானை சமேதரராக எழுந்தருளி வலம் வருவதை 'வசந்தோற்சவம்' என்றும் கூறுவதுண்டு. இந்த மஞ்சத்தில் அண்டவியல் கருத்துக்களும் பௌராணிகர் கருத்துக்களும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய மஞ்சத்தில் முருகப் பெருமான் எழுந்தருளும் காட்சியைக் காண ஆயிரக்கணக்கான அடியார்கள் கூடுவது வழமை. எனினும் இம் முறை நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாப் பெருந்தொற்று அச்சம் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அடியார்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் கட்டமைக்கப்பட்ட ஒழுங்குகளுக்கமைய அடியவர்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

KELZON LANKA
CONSTRUCTION (PVT) LTD
Registered contractor & Developers

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2020 இல் வெளியிடப்பெற்றது.